Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆ சித்திரை மீ 29 ஆம் உ சனிக்கிழமை (12 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 16 ஓசை 83

## 12 மீனவ வாடிகளைக் கடல் அள்ளிச் சென்றது


(முல்லைத்தீவு)

கொக்கிளாய் கடற்கரையோர, முகத்துவார மீனவ வாடிகள் பன்னிரண்டு கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் பெய்த கடும் மழையினாலும், கடற் கொந்தளிப்பினாலும் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டன. மீனவர்கள் பாது காப்பான இடத்துக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இதேவேளை நாயாற்றுப்பாலத்துக்கு மேலாகவும் வெள்ளம் பாய்ந்தது. இத னால் பாலத்துக்கு மேலுள்ள கிரவல் அள்ளப்பட்டு மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் இம்மண்ணரிப்பு தொடருமானால் முல்லைத்தீவு - கொக்கிளாய் போக்கு வரத்து நாயாற்றில் துண்டிக்கப்படுமென மக்கள் அஞ்சுகின்றனர். (58)

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கலைஞர் கருணாநிதி அழைப்பு

## பிரபாகரன் செய்தியுடன் யோகி, பாலா சென்னை செல்வார்கள்



தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி விடுதலைப் புலிகளை சென்னைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கிறார். கலைஞரின் அழைப்பை ஏற்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகியும், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் பெரும்பாலும் அடுத்த வாரம் சென்னைக்குச் செல்லலாமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில் மத்திய நகர விருத்தி அமைச்சர் திரு. முரசொலி மாறனும் பங்குபற்றுவார்.

இந்த சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் தமிழக முதல்வருக்கு தமிழீழ அரசியல் நிலைமை பற்றி எடுத்து விளக்குவார்கள். விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடமிருந்து ஒரு தனிப்பட்ட செய்தியையும் இவர்கள் எடுத்துச்செல்வார்களென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.



சமீபகாலமாக தமிழகமுதல்வர் தமிழ்நாட்டு சட்டசபையில் விடுதலைப்புலிகள் சார்பாக குரல்கொடுத்து வருவது தெரிந்ததே. தமிழீழ மக்களின் இனப்பிரச்சினை குறித்தும், பாதுகாப்பு பற்றியும் கலைஞர் மிகவும் அக்கறை காட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## நிதர்சனம் பாடல்களுக்கு சிங்களவர் மத்தியில் செல்வாக்கு

(யாழ்ப்பாணம்)

சிங்களப் பகுதிகளிலும் தற்போது நிதர்சனம் எழிச்சிப் பாடல்களுக்கு பெரும் மதிப்பு வந்துள்ளது. இப்பாடல் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்களை சிங்கள மக்கள் முண்டியடித்துக்கொண்டு வாங்குகிறார்கள் என கொழும்பு சென்று வந்த அரசாங்க அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிக் கொண்டிருந்த வேளை குறிப்பிட்ட ஒரு புகையிரத நிலையத்தில் இரவு பன்னிரண்டு மணியளவில் வடக்கு நோக்கி வந்த ரயில் நின்ற சமயம் அன்னை பூபதியின் பாடல் உட்பட நிதர்சனம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுனர் ஆசிரியர்களுக்கும் கல்லெறிக்கும் தொடர்பில்லை

(யாழ்ப்பாணம்)

இரணைதீவு கிராமசேவையாளர் அலுவலகத்தின் மீது நள்ளிரவு நேரம் கற்கள் வீசப்பட்டதற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று சமீபத்தில் நியமனம் பெற்ற பின் வரும் பயிலுனர் ஆசிரியர்கள் தெரிவிக்கிறார்கள். ஏ. ஜி. ஜெயசீலன், எஸ். செல்வரெட்ணம், எஸ். மருசலீன், அ. அருமைநாயகம் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்கள்.

## ஊழியர் இடமாற்றத்தை ஒழுங்கு படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் இடமாற்றங்களை ஒழுங்கு முறைப்படி ஒருமுகப்படுத்த பொது நிர்வாக உள்நாட்டு மாகாணசபைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு ஊழியருக்குகுறிப்பிட்ட ஒரு இடத்தில் ஐந்து வருடங்கள் கடமைபுரிய வேண்டும் என மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சில ஊழியர்களும் அதிகாரிகளும் முக்கியமான இடங்களில் பல வருடங்களாக சேவையாற்றி வருவது தெரியவந்துள்ளது.


இதற்காக இவர்களுக்கான புதிய இடமாற்றக் கொள்கை ஒன்று வகுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

சில ஊழியர்களும், அதிகாரிகளும் ஒரே இடத்தில் பத்துவருடங்களுக்கு மேலாக சேவை புரிவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## முறைசாராக் கல்விப் பிரிவுக்கு பிரிட்டன் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முறைசாராக் கல்விப் பிரிவுக்கு இங்கிலாந்து ... பெறப்பட்டுள்ளது. இவ் அன்பளிப்பைக் கொண்டு



## கிளிநொச்சியில் 6700 ஏக்கரில் சிறுபோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம் முறை 6700 ஏக்கர் நிலத்தில் சிறு போக நெற் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

## முதல் நிலையம் மட்டக்களப்பில்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணத்தில்

## ஒரிஸா தமிழர் பற்றி சட்டசபையில் விவாதம்

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழகத்தைவிட்டு நீங்கியுள்ள

அப்பொழுது கோரியமை குறிப்பிடத்தக்கது.

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களின் இடமாற்றங்களை ஒழுங்கு முறைப்படி ஒருமுகப்படுத்த பொது நிர்வாக உள்நாட்டு மாகாணசபைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு ஊழியருக்குகுறிப்பிட்ட ஒரு இடத்தில் ஐந்து வருடங்கள் கடமைபுரிய வேண்டும் என மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சில ஊழியர்களும் அதிகாரிகளும் முக்கியமான இடங்களில் பல வருடங்களாக சேவையாற்றி வருவது தெரியவந்துள்ளது.

இதற்காக இவர்களுக்கான புதிய இடமாற்றக் கொள்கை ஒன்று வகுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

சில ஊழியர்களும், அதிகாரிகளும் ஒரே இடத்தில் பத்துவருடங்களுக்கு மேலாக சேவை புரிவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## முறைசாராக் கல்விப் பிரிவுக்கு பிரிட்டன் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட முறைசாராக் கல்விப் பிரிவுக்கு இங்கிலாந்தின் நிதியுதவியுடன் புத்தகங்கள் வாங்கப்பட உள்ளன.

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராப் பிரிவு கல்வி அலுவலகத்திற்கு 550 பவுண் இங்கிலாந்து நாணயம் அந்நாட்டின் அன்பளிப்பாக பெறப்பட்டுள்ளது. இவ் அன்பளிப்பைக் கொண்டு புதிய புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு முறைசாராக்கல்வி பிரிவுக்கென புதிதாக அமைக்கப்பட்டுள்ள நூலகத்தில் வைக்கப்படவுள்ளதாக கல்வித்திணைக்கள முறைசாராப் பிரிவு அதிகாரி எஸ். சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.



## கிளிநொச்சியில் 6700 ஏக்கரில் சிறுபோகம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை 6700 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெரு நீர்பாசன, சிறு நீர்பாசன குளங்களின் கீழேயே மேற்படி சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது. (49)

அன்ரன் பாலசிங்கமும் பெரும்பாலும் அடுத்த வாரம் சென்னைக்குச் செல்லலாமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில் மத்திய நகர விருத்தி அமைச்சர் திரு. முரசொலி மாறனும் பங்குபற்றுவார்.

இந்த சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் தமிழக முதல்வருக்கு தமிழீழ அரசியல் நிலைமை பற்றி எடுத்து விளக்குவார்கள். விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடமிருந்து ஒரு தனிப்பட்ட செய்தியையும் இவர்கள் எடுத்துச்செல்வார்களென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

சமீபகாலமாக தமிழகமுதல்வர் தமிழ்நாட்டு சட்டசபையில் விடுதலைப்புலிகள் சார்பாக குரல்கொடுத்து வருவது தெரிந்ததே. தமிழீழ மக்களின் இனப்பிரச்சினை குறித்தும், பாதுகாப்பு பற்றியும் கலைஞர் மிகவும் அக்கறை காட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.





## முதல் நிலையம் மட்டக்களப்பில்

(மட்டக்களப்பு)
வட-கிழக்கு மாகாணத்தில் முதலாவது ஆங்கிலகல்வி மூலவள நிலையம்மட்டக்களப்பில் அமையும்.

மாவட்ட கல்வி பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் இதனை தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒரிஸா தமிழர் பற்றி சட்டசபையில் விவாதம்

(புதுடில்லி)
தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழகத்தைவிட்டு நீங்கியுள்ள நிலையில் ஒரிஸாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் குறித்து தமிழ் நாட்டு மக்கள் அவையில் அடுத்த வாரம் 17ஆம் திகதி அன்று விவாதம் நடக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரச்சினைபற்றி கடந்த 7ஆம் திகதி அன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கிளப்பிய, இந்திரா காங்கிரஸ் தொடர்பான விரிவான விவாதம் மக்கள் அவையில் நடாத்தப்பட வேண்டுமென அப்பொழுது கோரியமை குறிப்பிடத்தக்கது.

## சகல பதிவுகளும் தமிழில்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட காணிப் பதிவகத்தில் சகல அலுவல்களும் தமிழிலேயே நடைபெறுகின்றது.

குறிப்பாக உறுதிப்பதிவுகள் அனைத்தும் தமிழிலேயே பதியப்படுகின்றது. இதுதவிர பிறப்பு, இறப்பு, விவாகம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பிரதம அலுவலகத்தில் இரவு 8 மணிவரை தொலைபேசி இணைப்புப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்தில் தொலைபேசி அழைப்புக்கள் தினமும் இரவு எட்டு மணிவரை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம். என தபால் பகுதி உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

இதேபோல் முத்திரைக் கருமபீடமும் இரவு எட்டு மணிவரை திறந்திருக்கும் எனவும் அவர் சொன்னார்,

இதே வேளை தினமும் மாலை ஆறுமணி முதல் மறுநாள் காலை எட்டு மணிவரையும் தொலைபேசி அழைப்புக்கான கட்டணம் அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளது.

அதாவது கொழும்புக்குரிய தொலைபேசி அழைப்புக்கு வழமையாக ரூ. 26-40 அறவிடப்படுகிறது. அரைக்கட்டணம் 14.20 சதமாக்கப்பட்டுள்ளது.

இந்த அரைக் கட்டண சலுகை போயா தினம், சனி ஞாயிறு மற்றும் அரசாங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேக்கரி உரிமையாளர் முடிவிற்கு செயலக அதிகாரிகள் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)
யாழ்மாவட்ட பேக்கரிச் சங்க உரிமையாளர்களால் கடந்த ஏப்பிரல் மாதம் எட்டாம் திகதி தீர்மானிக்கப்பட்ட பாணின் நிறை குறைந்தது மூன்நூற்றி ஐம்பது கிராம் ஆக இருக்கவேண்டும் என்ற தீர்மானத்திற்கெதிராக சம்பந்தப்பட்ட யாழ். செயலக அதிகாரிகள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வதிகாரிகள் இதுபற்றி தெரிவிக்கும் பொழுது மக்களை ஏமாற்றும் வகையில் இந்த தன்னிச்சையாக எடுத்ததீர்மானம் மனம் வருந்தத்தக்கது எனகுறிப்பிட்டதுடன் 4ரூபா 90 சதத்திற்கு 450 கிறாம் பாண் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுமே தவிர வேறெந்த குறைந்த நிறையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கூறினார்.

இதுபற்றி தகுந்தவர்களிடம் மிகவிரைவில் தாம் முறையிட உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (லோ)

## காணாமற்போனகாசோலைகள் பற்றித் தகவல் இல்லை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு புனர்வாழ்வு கிளையிலிருந்து காணாமல் போன ஒன்பது காசோலைகளில் ஆறு காசோலைகள் பற்றி இதுவரை தகவல்கள் இல்லை.

சில மாதங்கள் முன்பு செயலக புனர்வாழ்வு கிளையில் இடம்பெற்ற மோசடிகளில் இதுவும் ஒன்று.

காசோலைப் புத்தகங்களிலிருந்து 9 காசோலைகள் மர்ம மறைவாகி விட்டது. உடன

(6ஆம் பக்கம் பார்க்க)

# நாவன்மையும் பணமுமே அன்றைய நீதி; ஒடுக்கப்பட்டோருக்கு இன்று இணக்க மன்று

- கோ. மகேந்திரராசா

(தர்மபுரம்)
கடந்த காலங்களில் நீதி சரியான முறையில் மக்களுக்கு கிடைக்கவில்லை. பேச்சு வல்லமையாலும், பண வலிமையாலும் இது பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் ஒடுக்கப்பட்ட மக்களே பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

இவ்வாறு தர்மபுரத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இணக்க மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், கடந்த காலங்களில் இருந்த தேச வழமைச் சட்டங்களும் இவர்களுக்கு நீதி வழங்கவில்லை. இவைபோலல்லாது இந்த இணக்க மன்றங்கள் ஒதுக்கப்பட்ட சமூகத்தில் உள்ள வறிய மக்களுக்கு நீதி வழங்கவேண்டும.

சமூக நீதியே நீதி வழங்குவதற்கு அடிப்படையாக இருக்க வேண்டும் எதிர்காலத்தில் அமையப் போகின்ற புதிய சமுதாயத்தின் நீதி நிர்வாகத்தின் முன்னோடியாகவே இப்போது ஆரம்பிக்கின்ற இணக்க மன்றம் அமையப் போகிறது என்றார் இக் கூட்டத்தில் முன்னணியின் அமைப்பாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)



## தொலைபேசி இன்று இயங்கும்

(யாழ்ப்பாணம்)
திடீரென இடம்பெற்ற கம்பித் திருட்டைத் தொடர்ந்து தொலைபேசி தொடர்புகள் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இந்த ஸ்தம்பிதம் இன்றுடன் நிவர்த்தி செய்யப்படும் என தொலைத்தொடர்பு திணைக்களத்தார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து நிகழ்ந்துவரும் இந்த தொலைபேசி கம்பித் திருட்டுபற்றி அவர்கள் தெரிவித்தபோது இம்முறை தமது அலுவலகத்தின் முன்னாலேயே திருட்டு நடந்துள்ளபோதிலும் தாம் எந்தவித எதிர்நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை உள்ளதாக கூறினர் எதிர்நடவடிக்கை எடுப்பதற்கு தமக்கு பாதுகாப்பு வசதிகள் எதுவும் இல்லாததால் எந்த எதிர் நடவடிக்கைகளுக்கும் தாம் அஞ்சுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர், (லோ)

## தவில் மேதை கடலில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)
சுழிபுரத்தைச் சேர்ந்த தவில் மேதை எஸ். ஆர். கணேசபிள்ளை கடலில் குளிக்கச் சென்ற சமயம் அலையுடன் அடித்துச் செல்லப்பட்டு மரணமானார்.

இவருடைய சடலத்தை அவ்விடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கண்டுபிடித்து உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர். (லோ)

## விமான விபத்து 25 பேர் பலி

(நியூயோர்க்)
மெக்ஸிக்கோ நகருக்கு அருகில் வயல்வெளி ஒன்றில் பயணிகள் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதால் அதில் பயணம் செய்த இருபத்தைந்து பேர் கொல்லப்பட்டனர்.

பரிசுத்தபாப்பரசரை சந்திப்பதற்காக இந்த விமானத்தில் சென்றகத்தோலிக்கமேற்றிராணியார் ஒருவரும் இந்தவிபத்தில் மரணமானார்.

## ஒப்பந்தக்காரர் இன்மையால் அபிவிருத்தி வேலை பாதிப்பு

(கிளிநொச்சி)
பன்முகப் படுத்தப்பட் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியாத ஒரு நிலை கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

வேலைகளைப் பொறுப்பெடுத்துச் செய்ய போதியளவு ஒப்பந்தக் காரர்கள்முன் வராததாலும். ஒப்பந்தம் செய்யப்பட்ட வீதிகளைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

குமுதம் ரூ. 7.00 ஆனந்த விகடன் ரூ. 8.00, இந்திய ருடே தமிழ் ரூ. 22.00, ஞான பூமி ரூ. 20.00 ரத்தினபாலா (சிறுவர் சஞ்சிகை) ரூ. 9.50 கல்கிரூ.8.00மற்றும்அனைத்து சஞ்சிகைகளும் விலை குறைக் கப்பட்டுள்ளன. வியாபாரிக ளுக்கு விற்பனை விலையில் இருந்து கழிவு வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்: பூபா லசிங்கம் புத்தகசாலை யாழ்ப் பாணம்.

**வகுப்புக்கள்**

தொழில் நுட்ப அறிவைப் பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் RADIO- T.V, DECK, Air Conditioning Refrigaration வயறிங், வெல் டிங், வைண்டிங், Typing, Spoken-English புதிய பிரிவு கள் ஆரம்பமாகின்றன. குறு கிய காலத்தில் சிறந்த செய் முறை அறிமுறைப்பயிற்சிக ளுடன் பெறுமதியான சான் றிதழ் வழங்கப்படும். VISPA ENGINEERING AID HALL, 328, NAVALAR ROAD, JAFFNA. (B-664)

**தேவை**

ஸ்ரூடியோவில் றபர்சீல் வேலை செய்வதற்கும் பழக வும் ஆர்வமுள்ள இளைஞர் கள் தேவை. தரன் ஸ்ரூடியோ 9,8 நவீன சந்தை, யாழ்ப் பாணம். போன் 23585 (R-462)

**எலக்ரீசியன் தேவை**

தமிழீழ ஆய்வு நிறுவனத் திற்கு (றாட்) மின்சார உதிரிப் பாகம் பொருத்துதல் (Electrician) குழாய் பொருத்துதல் (Plumber) பற்றி நன்கு அனுப வமுள்ள பணியாளர் தேவை. தகுந்தசம்பளம் வழங்கப்படும் தகுதியுடையோர் றாட், 207 இராமலிங்கம் வீதி, திருநெல் வேலி எனும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும் B/679


# கிராமங்கள் தோறும் சைவ கலா நிலையங்கள்

(பருத்தித்துறை)

இலங்கை சைவமன்ற பருத் தித்துறை பிரதேசசபை கிரா மங்கள் தோறும் சைவகலா நிலையங்களை நிறுவவுள்ளது.

இதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதென பரு த்திதுறைபர்வதவர்தனிகலா மண்டபத்தில் யாழ்-பல்கலைக் கழகப் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைச் சைவ மன்ற பருத்தித்துறை பிரதேச சபை பெரியபுராண பட னத்தை ஊக்குவிக்கவும் நட வடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

சமயகுரவர்களின் குருபூசை களை ஒழுங்காக நடத்துவ தெனவும் சபை தீர்மானித் துள்ளது. (25)

## வல்வையில் ஆலய திருவிழா

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்பாள் தேர்த் திருவிழா வெகுசிறப்பாக இம் முறை நடைபெற்றது.

இத் தேர்த்திருவிழாவின் போது அம்பாள், விநாயகர் முருகன் ஆகிய மூவரும் மூன்று சித்திரத்தேர்களில் தேரேறி வீதிவலம் வந்து பக்த அடி யார்களுக்கு அருள்பாலித் தார். சென்ற 9ஆம் திகதி அம்பாளின் தீர்த்தத்திருவிழா வெகு சிறப்பாக நடைபெற் றது. (25)

## மழையினால் நோய்கள்

(தீவுப்பகுதி)

நீண்ட கால வரட்சிக்குப் பின்னர் தீவுப்பகுதிகளில் மழைபெய்துள்ளது. இந்த மழையின் பின்னர் மக்களுக்கு வயிற்றோட்டம், காய்ச்சல், வாந்திபேதி போன்ற நோய் கள் ஏற்படுள்ளன.

## கையெழுத்துப் பிரதி

(வவுனியா)

வவுனியாவில் 'கிறுக்கல்' என்ற பெயரில் கையெழுத்து பிரதி ஒன்று சஞ்சிகை வடிவில் வெளியிடப் பட்டுள்ளது.

கதை கவிதை. போன்ற இலக்கிய அம்சங்கள் நிறைந்த இக் கையெழுத்துப் பிரதியை வன்னி இலக்கியக் கலாமன் றம் வெளியிட்டுள்ளது. (தி

# உதவி அரசாங்க அதிபர் நியமனம் நடைபெறுமா?

மட்டக்களப்பு பட்டிப்பளை உதவி அரச அதிபர் பிரிவிற் கான உதவி அரச அதிபர் நிய மனம் எப்போது நடைபெறும் என்ற கேள்வியை அப்பகுதி யிலுள்ள பொதுமக்களும், சமூக அமைப்புகளும் எழுப்பு கின்றன.

உதவி அரச அதிபர் பதவி வகித்தவர் வேறு பிரிவுக்கு இடமாற்றம் பெற்று பல மாதங்களாகிவிட்டன.

இதுவரை நிரந்தரமாக எவ ரும் நியமனம் பெறவில்லை.

இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாக ஈழநாதத்திற் குப்புகார்கள் கிடைத்துள்ளன


அதி நவீன தொழில்நுட்ப கருவிகள் மூலம்

**"கொம்பக்ற் டிஸ்க்"** இல்

வெளிவரும்

**பாடல்களை பதிவுசெய்வதற்கும்**

உங்கள் வீடுகளிலும், கோவில்களிலும் நடைபெறும்

**மங்களகரமான வைபவங்களையும் வீடியோ படம் பிடித்திடவும்**

நாடவேண்டிய இடம்

**நியூ விக்ரேஸ்**

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

23, மணிக்கூட்டு வீதி, BMC ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23532

R162



**யாழ்நகரில் இன்றைய சினிமா**

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2-30. 4-00, 6.30 & 9.30
**BRUCELEE IN RUCELEE THELEGEND**
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை10-30 2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
**16 வயதினிலே**
(B/860)

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
**"நாயகன்"**
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 88

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30 7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
**UNMASKING THE IDOL**
(Color)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**


## வல்லிபுரம் ஆழ்வார் ஆலய பாலஸ்தாபனம்

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய பாலஸ்தாபனம் கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

ஆலய மூலஸ்தான திருப் பணிவேலைகளும், இராஜ கோபுர திருப்பணிவேலைக ளும் பூர்த்தியடைந்ததும் அடுத்தமாத நடுப்பகுதியள வில் கும்பாபிஷேகம் நடை பெறுமென அறிவிக்கப்பட்டுள் ளது, (25)

# செஞ்சிலுவைச்சங்க தினம் நினைவு கூரப்படவேண்டும்

(விசேட நிருபர்)

"செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவைகளைமக்கள் முழுதாக அறிந்த பின்பே எமது சேவை இந்நாட்டில் ஸ்திரமாகும். அந் தவகையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்."

யாழ்-செஞ்சிலுவைச் சங்க பணிமனையில் நடைபெற்ற சர்வதேச செஞ்சிலுவைத்தின வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் சங்க தலைவர் டாக்டர் இ. தெய் வேந்தின் மேற்கண்டவாறுர கூறினார்.

திரு. கணேசலிங்கம் வர வேற்புரை நிகழ்த்தினார். யாழ்-அரச அதிபர் அன்ரன் அல்பிரட் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண் டனர்.

கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களின் மங்களஇசை யுடன் மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

டாக்டர் இ.தெய்வேந்திரம் தொடர்ந்து பேசுகையில் "செஞ்சிலுவைச் சங்கத்தை ஸ்தாபித்தவர் தினமான வைகாசிமாதம் 8 ஆம் திகதிக ளில் ஆண்டாண்டுதோறும் சர் வதேசமும் இத்தினம் நினைவு கூரப்பட்டு வருகிறது." என்று தெரிவித்தார்.

யாழ்-அரச அதிபர் அன்ரன் அல்பிரட் பேசுகையில் "மக்க ளுக்கு வேண்டிய தேவைகளை எந்த நேரம் ஆருக்கு என்ன வேண்டுமென்ற அடிப்படை யில் உதவிகள் ஆற்றப்பட வேண்டும்" என்றார்.

திருமதி யூலியற் அன்ரன் அல்பிரட் பரிசில்வழங்கினார்.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும், நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடாத்தும்

## வினா விடைப் போட்டி

நிபந்தனைகள்

(1) யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான போட்டி ஆகும்.

(2) இப்போட்டியில் க. பொ. த. சாதாரண, உயர் தர மாணவர்கள் பங்குபற்றலாம்.

(3) ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஐந்து மாண வர்கள் கொண்ட குழுவாகப் பங்குபற்றலாம்.

(4) வினாக்கள் அரசியல், பொருளாதாரம், விஞ் ஞானம், விளையாட்டு, பொது அறிவு சம்பந்த மானதாக அமையும்.

விண்ணப்ப முடிவு திகதி 20 - 5 - 90

வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக்கேடயமும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டு கின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

## மட்டக்களப்பில் வெசாக்விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வெசாக் பண்டிகையை முன்னிட்டு பொலிஸ் நிலையங்கள், இரா ணுவ முகாம்கள், விமானப் படைமுகாம் என்பன வெசாக் கூடுகளால் அலங்கரிக்கப்பட்டி

## இரத்ததானம்

செஞ்சிலுவைச்சங்க தினத்தை முன்னிட்டு வவு னியா மாவட்ட செஞ்சிலு வைச் சங்க கிளை உறுப்பி னர்கள் 8 ஆம் திகதி செவ்


**தேவைகளைப் பூர்த்திசெய்ய...**

- நெஸ்லேப் பால்மா வகைகள்
- சாய்ப்புச் சாமான்கள்
- குளிர் பானங்கள்
- சில்லறைச் சாமான்கள்
- மளிகைப் பொருட்கள்

**உடனுக்குடன்**

rician) குழாய் பொருத்துதல் (Plumber) பற்றி நன்கு அனுபவமுள்ள பணியாளர் தேவை. தகுந்தசம்பளம் வழங்கப்படும் தகுதியுடையோர் றாட், 207 இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி எனும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும் B/679

## மட்டக்களப்பில் வெசாக்விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வெசாக் பண்டிகையை முன்னிட்டு பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள், விமானப் படைமுகாம் என்பன வெசாக் கூடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நகரிலுள்ள புத்தகோயிலிலும் வெசாக்அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. (37)


### வினா விடைப் போட்டி

நிபந்தனைகள்

(1) யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான போட்டி ஆகும்.

(2) இப்போட்டியில் க. பொ. த. சாதாரண, உயர்தர மாணவர்கள் பங்குபற்றலாம்.

(3) ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஐந்து மாணவர்கள் கொண்ட குழுவாகப் பங்குபற்றலாம்.

(4) வினாக்கள் அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், விளையாட்டு, பொது அறிவு சம்பந்தமானதாக அமையும்.

விண்ணப்ப முடிவு திகதி 20 - 5 - 90

வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக்கேடயமும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்,
பலாலி வீதி, திருநெல்வேலி.

(B 680)


வில் ஆண்டாண்டுதோறும் சர்வதேசமும் இத்தினம் நினைவுகூரப்பட்டு வருகிறது.'' என்று தெரிவித்தார்.

யாழ்-அரச அதிபர் அன்ரன் அல்பிரட் பேசுகையில் ''மக்களுக்கு வேண்டிய தேவைகளை எந்த நேரம் ஆருக்கு என்ன வேண்டுமென்ற அடிப்படையில் உதவிகள் ஆற்றப்பட வேண்டும்'' என்றார்.

திருமதி யூலியற் அன்ரன் அல்பிரட் பரிசில்வழங்கினார்.

## இரத்ததானம்

செஞ்சிலுவைச்சங்க தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளை உறுப்பினர்கள் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரத்ததானம் வழங்கினார்கள்.

வவுனியா வைத்தியசாலை இரத்த வங்கியில் இந்த இரத்த தானவைபவம் நடைபெற்றது


தொலைபேசி: 23532

R162

தேவைகளைப் பூர்த்திசெய்ய...

- நெஸ்லேப் பால்மா வகைகள்
- சாய்ப்புச் சாமான்கள்
- குளிர் பானங்கள்
- சில்லறைச் சாமான்கள்
- மாளிகைப் பொருட்கள்

உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

## 'ஐங்கரன் ஸ்ரோர்ஸ்'

பிரதான சந்தை,
மானிப்பாய்.

B-668



தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00

**UNMASKING THE IDOL**
(Color)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.50
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30,2 30,6.30,10.30
ரஜனி ஸ்ரீதேவி நடித்த
**மூன்றுமுடிச்சு**
அடுத்த வெளியீடு
மௌனராகம்



உங்கள் தேவை! எங்கள் சேவை!

உங்கள் பெற்றோல் வாகனங்கள் யாவும்
சகல பழுதுகளும் உடனுக்குடன்
திருத்திக் கொடுக்கிறோம்.

வாகனங்களின் ரிங்கர் வேலைகள் :
ரிங்கர் - மூர்த்தி

சகல வாகனங்களின் வயறிங் வேலைகள் .
வயறிங் - வவி

மெக்கானிக்கல் வேலைகள்

# M. பத்மநாதன் கராஜ்

ஆனைக்கோட்டை.

(B 665)



பட்டதாரிகளுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்.

## இலங்கை நிர்வாக சேவை
(SLAS)

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள
150ற்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

## போட்டிப் பரீட்சை

1990 யூன் மாதம் 23ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: **12-05-1990** முற்பகல் 9.00 மணி

பாடநெறி: 1. கிரகித்தல் 2. நுண்ணறிவுத் தேர்வு
3- பொது வினாத்தாள் / விடய ஆய்வு

தகைமைகள்: 30 வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகளும் / அரசாங்க உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **18—05—1990**

- விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களிலும், விடுமுறை நாட்களிலும்
- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- கட்டணம் ரூபா 300/- (முழுப்பயிற்சிக்கும்)

போட்டிப் பரீட்சையின் மூலமே தெரிவு -- சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!

விண்ணப்பப் படிவங்களையும் விபரத் திரட்டினையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# ASTAN INSTITUTE

166/I, Hospital Road, JAFFNA.

((A· S· சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

B 655

# பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு முதல்
# சகலருக்கும் கட்டாய ராணுப்பயிற்சி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் அடுத்த ஆண்டில் இருந்து அனைவருக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி கொடுக்கும் திட்டத்தை கொண்டு வருவது பற்றி பாகிஸ்தானிய அரசு ஆராய்ந்து வருவதாக பாதுகாப்பு இணை அமைச்சர் முர்லாம் சர்வான் தீமான் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலையினை ஒட்டி நாம் பாதுகாப்புச் செலவினை குறைக்க முடியாது என்றும், பாகிஸ்தான் இன்று எல்லா எல்லைகளிலும் பிரச்சினையை கொண்டிருக்கிறது எனவும் ஆகவே தான் தம் அரசு எல்லா மக்களுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்க விரும்புவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**கனடா மறுப்பு**

இதேவேளை அணுவாயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்து இடாவிட்டால் அணுசக்தித் துறையில் பாகிஸ்தானுக்கு உதவப் போவதில்லை என்று கனடா கூறியிருக்கிறது.

கனடாவின் வெளியுறவு அமைச்சர் திருமதி மொனிக் வென்றி இஸ்லாமாபாத்துக்கு வந்திருந்த வேளையில் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் பாகிஸ்தான் இக் குறைப்பு நடவடிக்கைக்கு இணக்கம் தரும் பட்சத்தில் 1970-ம் ஆண்டில் கராச்சியில் கனடாவினால் கட்டப்பட்ட அணு மின்சார ஆலைகளை பாதுகாப்பாக இயக்குவதற்கு தேவையான தகவல்களை தருவது பற்றி கனடா நினைத்து வருவதாக கூறினார்.

**ஜனநாயக வழியிலேயே நம்பிக்கை**

இவருடன் பேச்சு வார்த்தை நடத்தி பாகிஸ்தானிய பிரதம மந்திரி பெனாசிர் பூட்டோ பிரதேச பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கு சிம்லா ஒப்பந்தமே சிறந்தவழி என்று குறிப்பிட்டார்.

மேலும் பாகிஸ்தான் தனது பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்த விரும்புவதால் இந்தப்பகுதியில் பூசலை விரும்பவில்லை என்றும் ஜனநாயக வழியையே தான் விரும்புவதாகவும் மக்களை அரசியல் ரீதியிலேயே வளர்க்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.



# பி. எல். ஓவிற்கு எதிரானவருடன்தான்
# எங்கள் நட்புறவு

- சமீர்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை எதிர்ப்பவர்களுடன் மாத்திரம்தான் எம்மால் நட்புறவை வைத்துக்கொள்ள முடியும் என்று இஸ்ரேல் பிரதம மந்திரி சமீர் கடந்த திங்களன்று தெரிவித்தார்.

இஸ்ரேலை அழித்தொழிப்பதற்கான கொள்கையைக் கொண்டிருக்கும் பி. எல். ஓவுக்கு எதிரான நிலையான கொள்கையைக் கொண்டிருக்கும் நாடு, இஸ்ரேலின் நட்புறவு நாடு என்பதற்கான ஒரு அளவுகோலாகும், இவ்வாறு இஸ்ரேலுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் ஒல்லாந்து நாட்டுப் பாராளு மன்றத் தூதுக் குழுவிடம் சமீர் தெரிவித்தார்.

ஒரு பாலஸ்தீனிய அரசை ஸ்தாபிப்பதற்கான யாசீர் அரபாத்தின் பிரச்சாரங்களின் போது அரபாத் இஸ்ரேல் தொடர்ந்திருப்பதை அங்கீகரித்துள்ளதாகவும் பயங்கரவாதத்தைக் கைவிட்டிருப்பதாக அரபாத் கூறியதாகவும் தெரிவித்தார்.

பி. எல். ஓவின் சமாதா

யூதரது அரசை அழிக்கச் சங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் பயங்கரவாத இயக்கமான பி. எல். ஓவுடன் தாம் எந்த விதத் தொடர்பையும் வைத்துக் கொள்வதற்கில்லை என்று இஸ்ரேல் பிடிவாதமாக நிற்கிறது.

பி. எல், ஓவின் முக்கிய பிரிவான பத்தா இயக்கம் லெபனானிலிருந்து நடாத்தும் பயங்கரவாதத் தாக்குதல்களை நிறுத்தி, கைப்பற்றப் பட்டிருக்கும் காஸா திட்டிலும், வெஸ்ட் பாங்கிலும் இஸ்ரேல் இலக்குகள் மீது தாக்குதல்களைமேற்கொண்டு வருவதாக இஸ்ரேலிய பிரதம இராணுவத் தளபதி டான் கோர்மன் மார்ச் மாதத்தில் தெரிவித்தார்.

1980 வெனிஸ் பிரகடனத்திலிருந்து ஐரோப்பா பி. எல். ஓவுக்கு ஆதரவு காட்டி வருகிறது. இஸ்ரேலுடன் நட்பும் பி. எல். ஓவுக்கு ஆதரவும் என்ற நிலை தொடர முடியாது என்பதை எமது நண்பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இஸ்ரேலின் நண்பர்கள் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி எமது பக்கம் இருக்க வேண்டும் என்பது தான் எமது கோரிக்கையாகும் இவ்வாறு சமீர் தெரிவித்தார்.

ஐரோப்பிய - நிலைப்பாடு தொடர்பாக இஸ்ரேல் கவலை கொண் ருப்பதோடு யாசீர் அரபாத் பயங்கரவாதத்தை கைவிட்டுள்ளதாக அறிவித்து யூத அரசை ஆதரித்த சமயம், 1980 இல் அமெரிக்கா பி. எல். ஓவுடன் பேச்சுவார்த்தை நடாத்தக் கோரியதை இஸ்ரேல் தெரிவித்தது.

கெய்ரோவில் இஸ்ரேல் பாலஸ்தீனியர் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டும் என்று மார்ச் மாதம் அமெரிக்கா வற்புறுத்தியதும் பேச்சுவார்த்தைகள் இடம் பெறக்கூடும் என்று இஸ்ரேலில் பலர் அச்சம் தெரிவித்தனர். ஆனால் பேச்சுவார்த்தைகளுக்கு சமீர் மறுப்புத் தெரிவித்தார்.. இதனால் அரசாங்கம் கவிழ்ந்தது.

## புகைப்படக்காரரை அனுமதித்ததால்
## பேச்சுவார்த்தை முறிவு

(புக்காரெஸ்ட்)
கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக ரூமேனிய தலைநகர் புக்காரெஸ்ட் இல் ஆர்ப்பாட்டம் செய்து வரும் கம்யூனிஷ எதிர்ப்பு ஆதரவாளர்களுக்கும் அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுக்

இடைக்கால அரசுத் தலைவர் திரு. இலியெஸ்கோவைச் சந்திக்க தாம் அனுமதிக்கப்படவில்லை எனவும் திரு. இலியெஸ்கோவின் பிரதிநிதிகளே தம்மை பேச்சுக்களின் போது சந்தித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். அரசுத்தலைவருடன் பேச்சு நடத்த கோரியும் பேச்சுக்களின்போது பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரியுமே தாம் பேச்சுவார்த்தை அரங்கிலிருந்து வெளியேறியதாக அவர்கள் தெரிவித்தனர்.



யாழ். நகரில் தனியார் கல்வி நிறுவனங்கள் (ரியூட்டறிகள்) முன்பாக வீதிகளில் சைக்கிள்கள் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்படுவது இப்பொழுது சாதாரண நிகழ்ச்சிகள் இதனால் விபத்துக்களும் ஏற்படுவதுண்டு நேற்று முன்தினம் ஸ்ரான்லி வீதியில் ஒரு ரீயூட்டரிமுன் இந்தக்காட்சி.

**மக்கள் ஒன்றிணைந்து**

# புதிய சமுதாயத்தை அமைக்க முன்வரவேண்டும்

- பாரதி

(மன்னார்)
எமது விடுதலைப் போராட்ட வரலாற்றையும், இந்திய வல்லாதிக்கத்தின் நயவஞ்சகங்களையும் சுட்டிக்காட்டி மக்கள் ஒன்றிணைந்து எமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்று அறைகூவல் விடுத்ததோடு, புதிய புரட்சிகர சமுதாயத்தை அமைப்பதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் ஒன்றிணையுமாறு, கடந்த 8 ஆம் திகதியன்று ஒடுக்கமம் கிராமத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது அடம்பன் பிரதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. பாரதி கேட்டுக்கொண்டார்.

இப் பொதுக்கூட்டத்திற்கு திரு. கா. சாமுவேல்ராஜ் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றுகையில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இன்று தமிழ் சமுதாயத்தின் முதுகெலும்பாகவுள்ளது புலிகளும், மக்களும் ஒன்று என்றும் குறிப்பிட்டார். மக்கள் தமது ஒத்துழைப்பைத் தந்து, புதிய புரட்சிகர சமுதாயத்தைப் படைக்க முன்வரவேண்டும் என்று கூறினார்.

கிராமியப் பொறுப்பாளர் திரு. காசி தமதுரையில், புரட்சிகர ஈழத்தைப் படைக்க அனைவரும் ஒன்றுபடவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மற்றும் திரு. க. துரைசிங்கம் திரு. ம. யோகரட்ணம், திரு. ந. தங்கவேல் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினார்கள். இப்பொதுக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# பசளைகடன்பெற மே25க்குமுன் விண்ணப்பிக்க வேண்டும்

வறிய விவசாயிகள் விவசாயத்தை மேற்கொள்ளப் போதிய பணவசதி இல்லாததால் பணம் படைத்தவர்களிடமிருந்து கூடிய வட்டிக்குப் பணத்தைப் பெற்று விவசாயம் செய்து வருகிறார்கள். அதனால் அரசாங்கம் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்மூலம் வயலுக்கு வேண்டிய பசளைகளை வழங்க முன்வந்துள்ளது. இக்கடனை பெறவிரும்பும் விவசாயிகள் மேமாதம் 25ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

சிறுபோகநெற்செய்கையை மேற்கொள்ள இருக்கும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு கடன் திட்டத்தின் கீழ் பசளை வழங்குவது சம்பந்தமான மகாநாடு ஒன்று கிளிநொச்சிக் கச்சேரியில் நடைபெற்றபோது கிளிநொச்சி அரசாங்க அதிபர் சார்பில் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் சொக்கலிங்கம் அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தமக்குக் கிட்டவுள்ள ப. நோ. கூ. சங்கத்தில் கடனாகப் பசளையைப் பெறமுடியும்.

ஒரு ஏக்கர் வயலுக்கு அடி உரம் 1 1/2 அந்தர், ரி.டி.எம். 1 1/2 அந்தர், யூரியா 1/2 அந்தர் கடனாக வழங்கப்பட இருக்கிறது.

இரணைமடுக் குளத்திட்டத்தின்கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மக்கள் வங்கியும், கமநல சேவைத்திணைக்களங்களின் கீழ்வரும் சிறுநீர்ப்பாசன குளங்களின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு இலங்கை வங்கியும் கடன் வழங்குகின்றன (49)

# மட்டக்களப்பில் ஆசிரியருக்கு

இஸ்ரேலை அழித்தொழிப்பதற்கான கொள்கையைக் கொண்டிருக்கும் பி. எல். ஓவுக்கு எதிரான நிலையான கொள்கையைக் கொண்டிருக்கும் நாடு, இஸ்ரேலின் நட்புறவு நாடு என்பதற்கான ஒரு அளவுகோலாகும், இவ்வாறு இஸ்ரேலுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் ஒல்லாந்து நாட்டுப் பாராளுமன்றத் தூதுக் குழுவிடம் சமீர் தெரிவித்தார்.

ஒரு பாலஸ்தீனிய அரசை ஸ்தாபிப்பதற்கான யாசீர் அரபாத்தின் பிரச்சாரங்களின் போது அரபாத் இஸ்ரேல் தொடர்ந்திருப்பதை அங்கீகரித்துள்ளதாகவும் பயங்கரவாதத்தைக் கைவிட்டிருப்பதாக அரபாத் கூறியதாகவும் தெரிவித்தார்.

பி. எல். ஓவின் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளை ஐரோப்பிய சமூகம் அதன் 1980 வெனிஸ் பிரகடனத்தில் ஆதரித்துள்ளதையிட்டு இஸ்ரேல் வருத்தமடைந்துள்ளதாக சமீரின் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கை தெரிவிக்கிறது.

நிற்கிறது.

பி. எல், ஓவின் முக்கிய பிரிவான பத்தா இயக்கம் லெபனானிலிருந்து நடாத்தும் பயங்கரவாதத் தாக்குதல்களை நிறுத்தி, கைப்பற்றப்பட்டிருக்கும் காஸா திட்டிலும், வெஸ்ட் பாங்கிலும் இஸ்ரேல் இலக்குகள் மீது தாக்குதல்களைமேற்கொண்டு

பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இஸ்ரேலின் நண்பர்கள் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி எமது பக்கம் இருக்க வேண்டும் என்பது தான் எமது கோரிக்கையாகும் இவ்வாறு சமீர் தெரிவித்தார்.

ஐரோப்பிய - நிலைப்பாடு தொடர்பாக இஸ்ரேல் கவலை கொண் ருப்பதோடு

தைகள் இடம்பெறவேண்டும் என்று மார்ச் மாதம் அமெரிக்கா வற்புறுத்தியதும் பேச்சுவார்த்தைகள் இடம் பெறக்கூடும் என்று இஸ்ரேலில் பலர் அச்சம் தெரிவித்தனர். ஆனால் பேச்சுவார்த்தைகளுக்கு சமீர் மறுப்புத் தெரிவித்தார்.. இதனால் அரசாங்கம் கவிழ்ந்தது.

## புகைப்படக்காரரை அனுமதித்ததால் பேச்சுவார்த்தை முறிவு

(புக்காரெஸ்ட்)

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக ரூமேனிய தலைநகர் புக்காரெஸ்ட் இல் ஆர்ப்பாட்டம் செய்து வரும் கம்யூனிஷ எதிர்ப்பு ஆதரவாளர்களுக்கும் அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களுக்கு படப்பிடிப்பாளர்களை அனுமதிக்காததைத் தொடர்ந்து பேச்சுக்கள் முறிவடைந்துள்ளது.

கம்யூனிஷ எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் தமது வெளியேற்றத்தின்பின் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கையில் இடைக்கால அரசுத் தலைவர் திரு. இலியெஸ்கோவைச் சந்திக்க தாம் அனுமதிக்கப்படவில்லை எனவும் திரு. இலியெஸ்கோவின் பிரதிநிதிகளே தம்மை பேச்சுக்களின் போது சந்தித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். அரசுத்தலைவருடன் பேச்சு நடத்த கோரியும் பேச்சுக்களின்போது பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று கோரியுமே தாம் பேச்சுவார்த்தை அரங்கிலிருந்து வெளியேறியதாக அவர்கள் தெரிவித்தனர்.

தலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது அடம்பன் பிரதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. பாரதி கேட்டுக்கொண்டார்.

இப் பொதுக்கூட்டத்திற்கு திரு. கா. சாமுவேல்ராஜ் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றுகையில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இன்று தமிழ் சமுதாயத்தின் முதுகெலும்பாகவுள்ளது புலிகளும், மக்களும் ஒன்று என்றும் குறிப்பிட்டார். மக்கள் தமது ஒத்துழைப்பைத் தந்து, புதிய புரட்சிகர சமுதாயத்தைப் படைக்க முன்வரவேண்டும் என்று கூறினார்.

கிராமியப் பொறுப்பாளர் திரு. காசி தமதுரையில்,

தால் பணம் படைத்தவர்களிடமிருந்து கூடிய வட்டிக்குப் பணத்தைப் பெற்று விவசாயம் செய்து வருகிறார்கள். அதனால் அரசாங்கம் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்மூலம் வயலுக்கு வேண்டிய பசளைகளை வழங்க முன்வந்துள்ளது. இக்கடனை பெறவிரும்பும் விவசாயிகள் மேமாதம் 25ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

சிறுபோகநெற்செய்கையை மேற்கொள்ள இருக்கும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு கடன் திட்டத்தின் கீழ் பசளை வழங்குவது சம்பந்தமான மகாநாடு ஒன்று கிளிநொச்சி கச்சேரியில் நடைபெற்றபோது கிளிநொச்சி

அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தமக்குக் கிட்டவுள்ள ப. நோ. கூ. சங்கத்தில் கடனாகப் பசளையைப் பெறமுடியும்.

ஒரு ஏக்கர் வயலுக்கு அடி உரம் 1 1/2 அந்தர், ரி. டி. எம். 1 1/2 அந்தர், யூரியா 1/2 அந்தர் கடனாக வழங்கப்பட இருக்கிறது.

இரணைமடுக் குளத்திட்டத்தின்கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மக்கள் வங்கியும், கமநல சேவைத்திணைக்களங்களின் கீழ்வரும் சிறுநீர்ப்பாசன குளங்களின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு இலங்கை வங்கியும் கடன் வழங்குகின்றன (49)

## மட்டக்களப்பில் ஆசிரியருக்கு சம்பள முற்பணம் கிடைக்கும்

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான இரு வருட சம்பள முற்பணம் மாதம் 30 பேருக்கெனவழங்கும்பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருட காலம் நிதியின்றி சுமார் 175 விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்தில் தேங்கிக் கிடந்தன.

மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் மேற்படி முற்பணம் வழங்க மாற்றுத் திட்டத்தை அமுல் செய்துள்ளார்.

ஏற்கனவே இம் முற்பணம் பெற்றவர்களிடமிருந்து அறவீடு செய்யப்படும் நிதிமூலமே மாதம் 30 பேருக்கு இதனை வழங்கப்படவுள்ளது. (37)

## மட்டக்களப்பு செயலகத்தில் பாஸ்போர்ட் படிவங்களில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செயலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்ப படிவத்திற்கு பல மாதங்களாக தட்டுப்பாடு நிலவுகின்றன.

செயலகத்தில் கடவுச்சீட்டுகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆனால் விண்ணப்பப்படிவம் இல்லை.

கச்சேரி சுற்றாடலில் தரகர்கள் ரூபா 25 வரை விற்பனை செய்கிறார்கள்.

அதேநேரம் கச்சேரியில் ஓய்வுபெற்ற ஊழியரொருவர் இப்படிவம் ரூபா 10 க்கு விற்பனை செய்கிறார்.

கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவம் இன்றி விண்ணப்பதாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

ரூபா 5க்கு வாங்க வேண்டிய படிவம் ரூபா 5-25 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கச்சேரியினால் ஏற்கனவே குடியகல்வு குடிவரவு திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்திற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை.

இதனால் அத்திணைக்களம் விண்ணப்பப் படிவங்கள் வழங்க மறுத்துவிட்டது. இது தான் தட்டுப்பாடு நிலவ காரணம் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (37)

## கலைஞர்கள் விபரத் திரட்டு

கனடாவில் வதியும் இலங்கையரான இலக்கிய மணி க. தா. செல்வராஜ கோபால் மட்டக்களப்பு கலை இலக்கியத் துறைகளில் கணிசமான பங்களிப்புச் செய்த கலைஞர் கவிஞர், எழுத்தாளர் பற்றிய விபரத்திரட்டு அடங்கிய நூலை அச்சிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந் நூலைத் துரிதமாக வெளியிடுவதற்கு மட்டக்களப்பு கச்சேரி கலாசாரப் பகுதி தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. இரா. நாகலிங்கம் தேவையான விபரங்களைத் திரட்டும்பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். (45)

## தெற்கில் கோலாகலமாக வெசாக் கொண்டாட்டம்

(கொழும்பு)

இம் முறை கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் வெசாக் பண்டிகை சிறப்பாக நடைபெற்றன.

கொழும்பில் பிரபல ஹோட்டல்களிலும் வெசாக் கீதம் பாடப்பட்டன. நகரில் வழமையை விட பந்தல்களும் அதிகமாக காணப்பட்டன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கொழும்பு மா நகரில் வெசாக் பந்தல்களை பார்வையிட்டனர்.

ஜனாதிபதி மாளிகையில் ஏழைகளுக்கு உணவுப் பொட்டலங்கள் திருமதி ஹேமா பிரேமதாசவால் வழங்கப்பட்டன

மக்களின் வசதிக்காக போக்குவரத்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

## மந்திகை ஆஸ்பத்திரியில் முறைப்பாட்டுப் பெட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை (மந்திகை)யில் அபிவிருத்திச்சபை வைத்தியசாலையில் முறைப்பாட்டு பெட்டி ஒன்றை வைத்துள்ளது. வைத்தியசாலையின் முன்பக்க விசாரணைப் பகுதியில் இம்முறைப்பாட்டுப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள், பொதுமக்கள் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள். பற்றாக்குறைகள் பற்றியும் ஆலோசனைகளையும் இம்முறைப்பாட்டுப் பெட்டியினுள் இடலாம் என்று வைத்தியசாலை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது. இம் முறைப்பாட்டுப் பெட்டியில் இடப்பட்டுள்ள குறைபாடுகள், பற்றாக்குறைகள், ஆலோசனைகள் கடிதங்களுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது நிற்க பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைமுன் புறவீதியால் பாரங்கூடிய வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வீதியால் பாரங்கூடிய வாகனங்கள் செல்வதால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் பலத்த கஷ்டங்களை அனுபவித்து வருவதாக வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்குப் புகார் செய்ததையடுத்தே இவ்வீதியால் பாரங்கூடிய வாகனங்கள் செல்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## மகவம் விருது

மகவம் கலை வட்டம் மூன்றாம் ஈராண்டில் (1988-1989) ஒப்பற்ற ஒப்பனைக் கலைஞர் உயர் திரு. சாமுவேல் பெஞ்சமின் அவர்களுக்கு மகவம் விருது வழங்கிக் கௌரவிக்கத் தீர்மானித்துள்ளது.

கலைஞருக்கான கௌரவிப்பு வைபவம் அடுத்த மாதம் ஏழாம் திகதி யாழ். திருமறைப் பணி நிலைய மண்டபத்தில் மாலை 3.00மணிக்கு கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## மோட்டார் சைக்கிள் விபத்து

(உரும்பிராய்)

உரும்பிராய் தெற்கில் யாழ். வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனும் சைக்கிளில் வந்துகொண்டிருந்த வயோதிபர் திரு நாவுக்கரசு என்பவரும் மோதிக்கொண்டதினால் பலத்த காயங்களுடன் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பெற்று சிகிச்சைபெற்று வருகின்றனர். (32)



கல்முனை வெஸ்லி மைதானத்தில் நடைபெற்ற தேனிசைச் செல்லாப்பாவின் இசைநிகழ்ச்சிகளை விடுதலைப்புலிகள் மட்டக்களப்புப் பொறுப்பாளர் தளபதி கருணா குத்துவிளக்கு ஏற்றுவதையும், மக்கள் முன்னணிப் பிரதித்தலைவர் கரிகாலன், அம்பாறை மாவட்ட மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் கஸ்ரோ ஆகியோர் உரையாற்றுவதையும், இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# புதுக்குளம்மகாவித்தியாலயத்தில் கணித ஆசிரியர் இல்லை

(வவுனியா)

வவுனியா புதுக்குளம் கொத்தணி மகாவித்தியாலயத்தில் உயர் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிக்க ஆசிரியர்கள் எவருமே இல்லைஎன்று மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

க.பொ.த. உயர்தர வகுப்பு வரை பாடங்கள் கற்பிக்கப்படும் இப்பாடசாலையில் பத்தாம் பதினொராம் ஆண்டுக்கான மாணவர்கள் கணித ஆசிரியர்கள் இல்லாமல் தவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாகஇப்பாடசாலையில் கல்வி கற்றுவரும் உயர்தர மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நம்பியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலையில் சிறப்பாக கணிதம் கற்பித்து வந்த ஆசிரியை நீலாவதி அமிர்தலிங்கம் வேறொரு பாடசாலைக்கு கடந்த வருடம் மாற்றம் பெற்றுச் சென்றதையடுத்துப் பல மாதங்களாகக் கணித ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதாகவும், இப்பாடசாலையில் கல்வி கற்பித்து வரும் சிலஆசிரியர்களாலேயே தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பாடம் படிக்கச் செல்லும்படி மாணவர்களுக்குக் கூறப்பட்டு வருவதாகவும் புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்ற ஆசிரியை ஒருவர் கணிதபாடம் கற்பிக்க சிலதினங்களுக்குமுன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனாலும்எதுவித கற்பித்தல்பயிற்சி நெறியும் பெற்றுக் கொள்ளாமல் நியமனமாகியுள்ள அவரிடமிருந்து பாடம் கற்பதில் சிரமமேற் பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. (தி)

## நெசவுசாலை வீதி புனரமைப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கில் அமைந்துள்ள நெசவுசாலை வீதியினை மானிப்பாய் நகரசபை ஆணையாளர் திரு. ராஜசுந்தரமும் இவ்வூரிலமைந்துள்ள திருவள்ளுவர் சன சமூக நிலையத்தினரும் புனரமைப்புச் செய்துள்ளார்கள்

இவ்வீதியினது நீளம் அரைமைலாகும். இவர்களது பெருமுயற்சியினால் இவ் வீதிக்கு மின்சாரக் கம்பங்கள் நாட்டப்பட்டு, மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வூரிலே நீண்ட காலங்களாக இருந்த இக் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு, இவ்வூர் மக்கள் பலரும் பாராட்டினையும் நன்றியினையும் தெரிவிக்கின்றார்கள்.

# கணவன் தாக்கியதால் மனைவி தற்கொலை

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளத்திலுள்ள விவசாயப் பண்ணையில் வாழ்ந்து வந்த ஐந்து குழந்தைகளின் தாய் ஒருவர் கிருமி நாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

புதன் கிழமை (9.5.90) அன்று இச்சம்பவம்இடம்பெற்றது.

ஆர் சரஸ்வதி (வயது 42) என்பவரே மேற்படி தற்கொலை செய்துகொண்டவராவார்.

சடலத்தை பிரேத பரிசோதனை செய்த வைத்தியர், அவரின்கன்னங்களில் கண்டல் காயங்கள் இருந்ததாகத்தெரிவித்துள்ளார்.

கணவர் மது போதையில் தாக்கியதன் காரணமாகவே இப்பெண்மணி தற்கொலை செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## செத்தல் விலை திடீர் வீழ்ச்சி

(வவுனியா)

வவுனியாவில் செத்தல் மிளகாயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கிலோ கிராம் 75 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டுவந்த செத்தல் மிளகாய், தற்போது, சுமார் 50 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

இதே சமயம் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. விதை வெங்காயம் தற்போது இப்பகுதியில் அந்தர் 1400 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. (தி)

## கிழக்கின் சில பகுதிகளில்

# வடபகுதி தபால்கள் சேவை தாமதப்படுகின்றன

(கல்லாறு)

யாழ்ப்பாணத்திற்கான தபால்கள் தனியாகக் கட்டப்படுவதும், யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் தபால்களை இரண்டாம் கட்டமாக விநியோகிப்பதும், மட்டக்களப்பு நகரிலே மட்டுமே நடைபெறுகின்றது.

மட்டக்களப்பிலிருந்து பிற்பகலிலும், பொத்துவிலில் இருந்து காலையிலும் இதற்யான தனியான தபால் பகல் சேவையும் முன்பு இருந்தது. இது இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் மட்டக்களப்பு தவிர்ந்த கிழக்கின் ஏனைய தபாற் கந்தோர்களில் யாழ்ப்பாணத்திற்கான தபால்களைக் காலையில் தனியாகக் கட்டுவதும், யாழ்ப்பாணத்தில் இருந்துவரும் தபால்களைப் பிற்பகலில் விநியோகிப்பதும் இன்னமும் ஆரம்பிக்கப்படாததால் யாழ்ப்பாணத்தில் இருந்து தபால்களைப் பெறுவதிலும், யாழ்ப்பாணத்திற்குத் தபால்களை அனுப்புவதிலும் மேலதிகமாக ஒரு நாள் தாமதிக்க வேண்டியிருக்கிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலமை வழமைக்குத் திரும்பி தபால் சேவைகளும் சீராகவும் துரிதமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இந்த தபால் சேவையை முன்னர் போலவே முறைப்படி நடாத்த வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

இதனால் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு இடையிலான தொடர்புகளைத் துரிதப்படுத்தும் வேலைகளிலும் சில அதிகாரிகள் அசமந்தமாக செயற்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES AIDE**

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.675


# குடிநீர் விநியோகக் கிணறு அசுத்தமாகவுள்ளது

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கும் பௌசர்கள் சாட்டிக்குசென்று அங்குள்ள கிணறுகளில் இருந்தே குடி தண்ணீரை எடுத்து வருகின்றன.

இத்தகைய கிணறுகளில் பல கிணறுகள் சுத்திகரிக்கப்படாமல் அசுத்தமாக காணப்படுவதுடன் பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பை ஊட்டக் கூடியனவாக உள்ளன மேலும் இக் கிணறுகளின் மேல் மூடல்கள் எதுவும் இடப்படாததனால் பனம்பூ, னையோலை மற்றும் குப்பை கூழங்கள் கிணறுகளில் காணப்படுகின்றன. அத்துடன் இக் கிணறுகளில் உள்ள தண்ணீரில் குளோரீன் இடப்படுவதாகவும் தெரியவில்லை பல்லாயிரக் கணக்கான மக்களின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்யும் இக் கிணறுகளை ஓரளவு நன்றாக வைத்திருந்து அதன் மூலம் ஓரளவு சுத்தமான நீரை மக்கள் பெற மேற்படி கிணறுகளின் உரிமையாளர்கள் கவனம் எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. (22)

## வாலிபர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விளாவெட்டுவான் என்னுமிடத்தில் வாலிபரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஞானமுத்து தங்கத்துரை (32) என்பவர்தான் இறந்தவராவார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. (37)



விற்பனையாகின்றது

குமுதம் ரூ. 7-00 ஆனந்தவிகடன் ரூ. 8-00
இந்தியாருடே தமிழ் ரூ.22-00 ஞானபூமி ரூ. 20-00
ரத்தினபாலா (சிறுவர் சஞ்சிகை) ரூ 9-50
கல்கி ரூ. 7-50

மற்றும் அனைத்து சஞ்சிகைகளும்
விலை குறைக்கப்பட்டுள்ளன.
வியாபாரிகளுக்கு
விற்பனை விலையில் இருந்து கழிவுவழங்கப்படும்
தொடர்பு கொள்ளவும்.

பூபாலசிங்கம் புத்தகசாலை


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



குமாரசிங்கம் ஜோகிதா (கௌரி)

மண்ணில் 03- 07- 89 விண்ணில் 12- 04- 90

மழலையே நீ வளர்ந்து
மகிழ்விப்பாய் எம்மை என்று
மனம் நிறை எதிர்பார்த்து
மட்டற்ற விருப்புக் கொண்டோம்
விருப்பங்கள் வீணாகி
விரகத்திற்கு ஆளாகி
விறைப்பான சோகத்தில்
விம்மிப் பொருமுகின்றோம்.

துயருறும்

5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.675

டன் இக் கிணறுகளில் உள்ள தண்ணீரில் குளோரீன் இடப்படுவதாகவும் தெரியவில்லை பல்லாயிரக் கணக்கான மக்

(32) என்பவர்தான் இறந்தவராவார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. (37)

## விற்பனையாகின்றது

குமுதம் ரூ. 7-00 ஆனந்தவிகடன் ரூ. 8-00
இந்தியாருடே தமிழ் ரூ.22-00 ஞானபூமி ரூ. 20-00
ரத்தினபாலா (சிறுவர் சஞ்சிகை) ரூ 9-50
கல்கி ரூ. 7-50

மற்றும் அனைத்து சஞ்சிகைகளும்
விலை குறைக்கப்பட்டுள்ளன.
வியாபாரிகளுக்கு
விற்பனை விலையில் இருந்து கழிவுவழங்கப்படும்
தொடர்பு கொள்ளவும்.

## பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

B.641



## குமாரசிங்கம் ஜோகிதா (கௌரி)

மண்ணில் 03- 07- 89 | விண்ணில் 12- 04- 90

மழலையே நீ வளர்ந்து
மகிழ்விப்பாய் எம்மை என்று
மனம் நிறை எதிர்பார்த்து
மட்டற்ற விருப்புக் கொண்டோம்
விருப்பங்கள் வீணாகி
விரகத்திற்கு ஆளாகி
விறைப்பான சோகத்தில்
விம்மிப் பொருமுகின்றோம்.

இடதுகரை
முத்தையன்கட்டு
முல்லைத்தீவு

துயருறும்
அப்பா, அம்மா
அப்பம்மா, தாத்தா
சித்தப்பா, மாமாமார்
அத்தைமார், அண்ணிமார்

(R/466)

## உங்கள் இல்லம்

அழகின் கலைக்கூடமாக திகழவைக்கும்..

பென்ரலைற் டியூலக்ஸ்

## பெயின்ற் வகைகளை

எம்மிடம் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் அனைத்தும்

உங்கள் நிர்மாண வேலைகளுக்குத் தேவையான

சீமெந்து | கம்பி | அஸ்பெஸ்டஸ் சீற்

அனைத்தும் மலிவுவிலையில் பெறவும்

உங்கள் அன்றாட உபயோகத்துக்கான

வாளிகள் | ஸ்ரீல் அடுப்புகள் | கதிரைபின்னும் வயர்கள்

ஆணிகள் | ஸ்குறு ஆணிகள் | புரி ஆணிகள்

கோழி வளர்ப்புக்கான... கம்பி வலைகள் அனைத்திற்கும்...

மானிப்பாயில் ஒரே ஸ்தாபனம்

## "ராஜன் ரிம்பர் டிப்போ"

யாழ் வீதி, மானிப்பாய்.

B-669

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்..

உங்களுக்குத் தேவையான
சகல விதமான-
மருந்துச் சரக்கு வகைகள்
மூலிகைகள்
மற்றும்
ஆயுர்வேத - சித்த மருந்துகள்
அனைத்திற்கும் ..,
சாய்ப்புச் சாமான்களுக்கும்

## நவகுமரன்ஸ்

யாழ். வீதி, மானிப்பாய்.

(B 666)

### சிந்தனைக்கு

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு

– திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 12 - 05 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

## கல்வித்திட்டம்

## பதவி மாற்றமல்ல!

சகல பாடசாலைகளிலும் ஆண்டு ஒன்பதாம் வகுப்பில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் வாழ்க்கை சார்ந்த கல்வியை மாணவருக்குப் போதிப்பதற்குக் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்பாகவே இத்தகைய தொழில்நுட்பப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

ஏட்டுக்கல்வி மட்டும் அளிக்காமல் மாணவர்களுக்குத் தொழில்நுட்பக் கல்வி அளிக்கப்பட வேண்டியது நல்ல திட்டம் மட்டுமல்ல அவசியமானதும்கூட.

முன்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிபீடத்தில் இருந்த காலத்திலும் சகல மாணவர்களுக்கும் தொழில்நுட்பக்கல்வி அளிப்பதற்கான திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

சிறுவகுப்பில் படிப்பவர்களும் தொழிற்கல்வி படிப்பதற்கு சில உபகரணங்களைக் கட்டிக்காவிக்கொண்டு சென்ற காட்சி இன்னமும் நினைவில் நிற்கிறது. சிலர் சில தொழில்களில் சிறிதளவு பயிற்சி பெற்றதும் உண்மை.

அன்றைய சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அன்று கல்வி அமைச்சராக இருந்தவரும் தொழிற்கல்வி சம்பந்தமாக அந்தத்திட்டத்தைக் கொண்டு வந்தனர்.

பொதுத் தேர்தலின் பின் ஆட்சி மாறியது. கல்வித் திட்டமும் மாறியது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது; புதிய கல்வி அமைச்சர் இந்த நாட்டின் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் கல்வித் துறையைப் பொறுப்பேற்றார்.

பழைய அரசும் பழைய அமைச்சரும் கொண்டு வந்த தொழிற்பயிற்சிக் கல்வி முறை தூக்கி எறியப்பட்டது.

இன்றைய அரசு இப்பொழுது ஆண்டு ஒன்பதாம் வகுப்பிலிருந்து சகல பாடசாலைகளிலும் மாணவர்

# இந்தியாவில் பயிற்சி பெறக்கூடாது என்பதே விடுதலைப்புலிகள் கொள்கை

## அவர்கள் தமிழகத்தில் முகாம் வைத்திருக்கவில்லை
## ஒரே நாளில் 4 கோடி ரூபாய் தமிழக அரசு கொடுத்தது

(நேற்று முன்தின தொடர்ச்சி)

### விடுதலைப் புலிகளின் ஆதிக்கம்

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருப்பதாக சொல்லப்படுவது கடைந்து எடுத்த உண்மைக்கு மாறான ஒரு செய்தியாகும். பொய் என்றுகூடச் சொல்லலாம்.

ஏனென்றால் இங்கே உறுப்பினர் சொல்வது பொய் என்று சொன்னால்தான் குற்றம். ஆனால் பத்திரிகைகளில் வெளிவருவது அதைப்பற்றி பிரசாரம் செய்வது எல்லாம் கடைந்து எடுத்த பொய்.

இன்னும் சொல்லப் போனால் வடிகட்டிய பொய்! இன்னும் சொல்லப்போனால் யமக்களத்தில் வடிகட்டிய பொய் என்று அதைச் சொல்ல வேண்டும்.

### முப்பத்தாறு முகாம்கள் இருந்தன

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருப்பதற்கு நியாயமே இல்லை. ஒரு காலத்தில் இங்கே பல முகாம்கள் இருந்தன. இன்னும் சொல்லப் போனால் இங்கே எந்த முகாம்களும் கிடையாது என்று அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அறிவித்த அந்தக் காலகட்டத்தில் தமிழ் நாட்டில் முப்பத்தாறு முகாம்கள் இருந்தன.

அவற்றில் பயிற்சிபெற்றவர்கள் ரெலோ, ஈரோஸ், ஈ. பி. ஆர். எல்.எவ், புளொட் போன்றவர்கள் இருந்தனர் விடுதலைப்புலிகள் அல்ல.

### விடுதலைப் புலிகள் பயிற்சி பெறவில்லை

விடுதலைப் புலிகளின் கொள்கையே அவர்கள் இந்தியாவில் பயிற்சி பெறக்கூடாது என்பதாகும் எனவே அவர்கள் எந்த முகாமும் இங்கு நடாத்தவில்லை. அவர்களில் சிலர் இங்கே தங்கியிருந்தார்கள். நடமாடிக் கொண்டிருந்தார்

சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு கிட்டத்தட்ட நான்கு கோடி ரூபா ஒரே நாளில் தமிழக அரசின் சார்பில் 1987 இல் வழங்கப்பட்டது. அதனை அவர்கள் ஆயுதம் வாங்க பயன் படுத்தியதாக அன்று தகவல்கள் எல்லாம் வெளிவந்தன.

இப்படியாக 36 முகாம்கள் இருந்த அன்றைய காலத்தில் கூட இந்திரா காந்தி முகாம்களே இல்லை என்று சொன்னார்.

இன்று நான் சொல்வது அந்த அடிப்படையில் அல்ல. உண்மையிலேயே முகாம்கள் இல்லை அப்படி ஓரிரு முகாம்கள் இருந்தாலும் அவர்கள் வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். விடுதலைப்புலிகள் அல்ல.

அதில் இருந்தவர்கள் எல்லோரும்கைது செய்யப்பட்டுள்ளனர் விடுதலைப்புலிகள் கூட அப்படி முகாம் நடாத்திக் கண்டுபிடிக்கப்பட்டால், அதனை யாராவது சுட்டிக் காட்டினால், அடையாளம் காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது.

### திராவிடக் கழகத்திற்கு பயிற்சி

இங்கே 20 திராவிடர் கழகத் தோழர்களுக்கும், தி. மு. க. தோழர்களுக்கும் விடுதலைப் புலிகள் பயிற்சி அளிக்கிறார்கள் என்று கூடசொல்லப் பட்டுள்ளது. போயும் போயும் 20 பேருக்கு பயிற்சி அளித்து என்ன செய்வார்கள் என்று எனக்கு புரியவில்லை.

திராவிடர் கழகமோ, தி. மு. கவோ அப்படிப்பட்ட வன்முறைப்பயிற்சியிலே நாட்

படிப்பட்ட வன்முறைப் பயிற்சிக்கு அவர்கள் தங்களை ஆளாக்கிக் கொண்டவர்களும் அல்லர். அப்படி எல்லாம் தி.மு.கவை அண்ணா வளர்க்கவில்லை.

யாருக்காவது சந்தேகம் இருக்குமானால் என் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் ஒரு குழுவாக கடற்கரைப்பகுதிக்கு வந்து பார்க்கவும் அங்கு தவறு இருந்தால் அதைக் களையவும் தயாராக இருக்கின்றேன். வேண்டும் என்றே தமிழக அரசுக்கு ஒரு களங்கம் கற்பிக்க சட்டம் ஒழுங்கு அமைதி இங்கு இடறுகிறது என்ற ஒரு நிலையை உருவாக்கி மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஒரு மோதலை உருவாக்க சிலபேர் நடாத்துகிற முயற்சி நிச்சயமாக வெற்றியளியாது.

நான் இங்கு பேசுகின்ற கருத்துக்கள் மத்திய அரசுக்கு நேற்றையதினம் பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களுக்குப் பதிலாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

அப்போது பீற்றர் அல்போன்ஸ் குறுக்கிட்டு முதலமைச்சர் இங்கு கூறும்போது மீண்டும் மீண்டும் மத்திய அரசு கேட்டும் கடற்கரைப் பாதுகாப்புப் படை வரவில்லை என்றார்.

முதலமைச்சரைக் குறை கூறி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதால்தான் இந்திய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திற்குப் பாதுகாப்புக்கு வர அஞ்சுகிறார்களோ என்ற ஐயம் எங்களுக்கு

> **பொது அறிவோடு யாரும் எடுத்துப்பார்த்தால் விடுதலைப் புலிகளுக்கு இப்போது தமிழகத்திலோ வேறு இடத்திலோ அடைக்கலம் புகுந்து ஒளித்து வாழவேண்டிய அவசியம் இல்லை. யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் ராஜா மாதிரி இருக்கின்றார்கள்.** -சட்டசபையில் கருணாநிதி

### மத்திய அமைச்சரே படைபற்றி எழுதினார் முதலமைச்சர் கருணாநிதி:

இந்திய இராணுவத்தைப் பற்றி நான் குறைகூறவில்லை. இந்திய இராணுவத்தை சென்னையில் வரவேற்காதததன் காரணத்தையே சொன்னேன். இன்றைக்கும் நான் இந்திய இராணுவத்தைக் குறைகூறிப் பேசவில்லை. ஆனால் குறைகூறுவது தவறும் அல்ல.

முன்னாள் இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங் கூட இந்திய இராணுவத்தின் நடவடிக்கைக்காக அமிர்தசரஸ் கோயிலுக்குச் சென்று வருத்தம் தெரிவித்தார்.

முப்படையின் தலைவரான அவரே வருத்தம் தெரிவித்தது பற்றிநானிங்கு விளக்கம்அளித்துள்ளேன். இன்னும் சொல்லப்போனால் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இந்திய அமைதிப்படையைப் பற்றி எழுதிய கட்டுரை மயிலாஸ் என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது.

அவ்வளவு கொடுமைகள் அங்கே நடைபெற்றது என்று இந்திய அமைதிப்படையைப் பற்றி அவர் எழுதிய கட்டுரையில் வெளியிடப்பட்டுள்ளது. ஒருவேளை முதலமைச்சர் குறைகூறிய காரணத்தால் இராணுவத்தினர் இங்கே வர மாட்டார்களா என அல்போன்ஸ் கேட்டார். காவல் துறை மானியத்தில் காவல் துறையை இவ்வளவு குறை கூறியவர்களே அதற்காகக் காவல்துறை வராமலா போய் விடும் என்றார் முதலமைச்சர்

### டீ. பி. ராஜேந்திரன்,

அந்தப் புத்தகத்தில் வியட்னாமில் அமெரிக்க இராணுவத்தினர் மயிலாய் என்றகிராமத்தில் சுமார் மூவாயிரம் மக்களை குழந்தைகளுடன் ஒழித்துத்தள்ளியது. மயிலாய்என்ற தலைப்பில் வல்வெட்டித்துறையில் எழுபத்திரண்டுபேர் கொல்லப்பட்டது பற்றி அவர் எழுதியி[illegible]றாரே தவிரகுறிப்பிட்ட குற்றச் சாட்டாக அது

### முதலமைச்சர்:

எனக்குத் துணை நின்றதற்காக ராஜேந்திரனுக்கு நன்றி.

### குமரிஅனந்தன்

எந்த முகாமாவதுஇருந்தால் சுட்டிக் காட்டுமாறு முதலமைச்சர்சொன்னார். அண்மையில் குற்றாலத்துக்கு அருகில் ஒரு முகாம் நடந்ததாகஎனக்கு தகவல் வந்தது.

அந்தப்பக்கம் உண்மையாக புலிகளைப்பார்க்கச் சென்றவர்களில் ஒருவர் நான்கு கால் புலிகளை பார்க்கப் போனீர்களா அல்லது இரண்டு கால் புலிகளை பார்க்க போனீர்களா என்றார் அதனால் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் புலிகளோ என்றும் தெரியவில்லை. அவர்களை ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்த நக்சலைட்டுகள் என்றும் சொல்லுகிறார்கள்.

### முதலமைச்சர்

குமரிஅனந்தன் இதிலேஒரு தெளிவான முடிவை எடுத்துச் சொல்லவில்லை அவர்கள் நக்சலைட்டாக இருக்கக் கூடும் என்ற சந்தேகத்துடன் எடுத்துக் கூறுகிறார் யாரும் தவறாக கருதக்கூடாது. பொது அறிவோடு யாரும் எடுத்துப் பார்த்தால் விடுதலைப்புலிகளுக்கு இப்போது தமிழகத்திலோ வேறு இடத்திலோ அடைக்கலம் புகுந்து ஒளிந்து வாழவேண்டிய அவசியம் இல்லை யோசித்து பார்க்கவேண்டும். அவர்கள் இப்போது அங்கே ராஜாமாதிரி இருக்கிறார்கள்.

### ஆர். சொக்கா

இந்திரா காந்தி காலத்தில் பல தீவிரவாதிகளுக்கு இங்கே முகாம் பயிற்சி கொடுக்கப்பட்டதாக முதலமைச்சர் கூறினார். இது சர்வதேச பிரச்சினை இலங்கைக்கும்இந்தியாவுக்கும் உள்ள பிரச்சினை எதிர் காலத்தில் இந்தியாவை இலங்கை அரசு குறை கூறுவதற்கு ஒரு சான்றாக முதலமைச்சர் கூறியதைச் சொன்னால் இந்தியா குற்றம் சாட்டப்படவேண்டிய நிலைக்கும் ஆளாகும்.

### முதலமைச்சர்

இது பகிரங்க அதிசயமாக இருந்தது 'இந்தியா ருடே' ஏடு அந்த முகாம்களை படங்களுடன் அப்போது வெளியிட்டது ஆனால் அதனை இரகசியம் என எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்தனர். இந்தச்செய்தி எப்படிஅவர்களுக்கு கிடைத்தது என்றால் 'றோ' அதிகாரிகளின்அலுவலகத்தின் அந்த 'மப்' பை படங்களு

முன்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிபீடத்தில் இருந்த காலத்திலும் சகல மாணவர்களுக்கும் தொழில்நுட்பக்கல்வி அளிப்பதற்கான திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

சிறுவகுப்பில் படிப்பவர்களும் தொழிற்கல்வி படிப்பதற்கு சில உபகரணங்களைக் கட்டிக்காவிக்கொண்டு சென்ற காட்சி இன்னமும் நினைவில் நிற்கிறது. சிலர் சில தொழில்களில் சிறிதளவு பயிற்சி பெற்றதும் உண்மை.

அன்றைய சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அன்று கல்வி அமைச்சராக இருந்தவரும் தொழிற்கல்வி சம்பந்தமாக அந்தத்திட்டத்தைக் கொண்டு வந்தனர்.

பொதுத் தேர்தலின் பின் ஆட்சி மாறியது. கல்வித் திட்டமும் மாறியது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது; புதிய கல்வி அமைச்சர் இந்த நாட்டின் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் கல்வித் துறையைப் பொறுப்பேற்றார்.

பழைய அரசும் பழைய அமைச்சரும் கொண்டு வந்த தொழிற்பயிற்சிக் கல்வி முறை தூக்கி எறியப்பட்டது.

இன்றைய அரசு இப்பொழுது ஆண்டு ஒன்பதாம் வகுப்பிலிருந்து சகல பாடசாலைகளிலும் மாணவர்களுக்குத் தொழிற்கல்வி அளிப்பதற்குத் திட்டம் கொண்டு வருகிறது.

அடுத்த பொதுத் தேர்தலில் இந்த அரசும் இன்றைய கல்வி அமைச்சரும் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாமல்போய் புதிய அரசும் புதிய கல்வி அமைச்சரும் வந்தால் இந்தத் தொழிற்கல்வித்திட்டமும் தூக்கி எறியப்படலாம்.

இது இலங்கையில் நடைமுறையிலிருந்துவரும் நிகழ்ச்சிகள்.

மேல்நாடுகளில் கல்வித்திட்டம் வகுக்கும்போதும் கல்வித்திட்டத்தில் மாற்றம் செய்யப்படும்போதும் வருங்காலப் பிரஜைகளின் நலனைக் கருத்தில்கொண்டும் இருபது இருபத்தைந்து வருடங்களில் கல்வித்திட்டம் எப்படிச் செயல்படும். இதனால் ஏற்படக்கூடிய பயன்கள் என்ன என்பதை ஆராய்ந்து கல்விமான்களுடன் கலந்தாலோசித்தே தீர்மானம் எடுக்கப்படுவதுண்டு.

இலங்கையில் தொழில் நுட்பக்கல்வி மட்டுமல்ல பாடத்திட்டங்கள் கூட பதவிக்கு வரும் அமைச்சரின் விருப்பு வெறுப்பைப் பொறுத்தே மாற்றம் செய்யப்படுகிறது.

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்ததைத் தொடர்ந்து பாடப்புத்தகங்களில் ''தேசியம்'' என்ற பெயரில் துவேஷச்சிந்தனைகள் ஊட்டப்பட்டன.

இதன்பின் பதவிக்கு வந்த கல்வி அமைச்சர்களும் இதே மனப்பான்மையுடனேயே கல்விக் கொள்கைகளை வளர்த்தனர்.

இதன் விளைவை நாடு இன்றும் அனுபவித்து வருகிறது.

நாட்டின் வருங்காலத் தலைவர்கள் தான் இன்றைய இளம்சந்ததியினர். இவர்களை நல்ல பிரஜைகளாக்குவது நாட்டின் கல்விக்கொள்கை.

ஆட்சியிலிருக்கும் வரை அல்லது பதவியிலிருக்கும் வரை வகுப்பது நாட்டின் கல்விக்கொள்கையாக இருக்கமுடியாது.

இப்பொழுது கொண்டு வருவதற்குத் திட்டமிட்டுள்ள தொழிற்பயிற்சித்திட்டம் கல்விமான்களையும் தொழில் நுட்ப அறிஞர்களையும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளையும் கலந்தாலோசித்து நீண்ட காலத்துக்குப் பயன்தரக்கூடிய முறையில் வகுக்கப்பட வேண்டும்.

அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாகக் கல்வித்திட்டங்கள் அமையக்கூடாது.

---

முகாம்கள் இருந்தன. இன்னும் சொல்லப் போனால் இங்கே எந்த முகாம்களும் கிடையாது என்று அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அறிவித்த அந்தக் கால கட்டத்தில் தமிழ் நாட்டில் முப்பத்தாறு முகாம்கள் இருந்தன.

அவற்றில் பயிற்சிபெற்றவர்கள் ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். புளொட் போன்றவர்கள் இருந்தனர் விடுதலைப்புலிகள் அல்ல.

## விடுதலைப் புலிகள் பயிற்சி பெறவில்லை

விடுதலைப் புலிகளின் கொள்கையே அவர்கள் இந்தியாவில் பயிற்சி பெறக்கூடாது என்பதாகும் எனவே அவர்கள் எந்த முகாமும் இங்கு நடாத்தவில்லை. அவர்களில் சிலர் இங்கே தங்கியிருந்தார்கள். நடமாடிக் கொண்டிருந்தார்கள். பல்வேறு அரசியல் கட்சி அல்ல.

அதில் இருந்தவர்கள் எல்லோரும்கைது செய்யப்பட்டுள்ளனர் விடுதலைப்புலிகள் கூட அப்படி முகாம் நடாத்திக் கண்டுபிடிக்கப்பட்டால், அதனை யாராவது சுட்டிக் காட்டினால், அடையாளம் காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது.

## திராவிடக் கழகத்திற்கு பயிற்சி

இங்கே 20 திராவிடர் கழகத் தோழர்களுக்கும், தி. மு. க. தோழர்களுக்கும் விடுதலைப் புலிகள் பயிற்சி அளிக்கிறார்கள் என்று கூடசொல்லப் பட்டுள்ளது. போயும் போயும் 20 பேருக்கு பயிற்சி அளித்து என்ன செய்வார்கள் என்று எனக்கு புரியவில்லை.

திராவிடர் கழகமோ, தி. மு. கவோ அப்படிப்பட்ட வன்முறைப்பயிற்சியிலே நாட்டம் கொண்டவையல்ல. அப்

நடாத்துகிற முயற்சி நிச்சயமாக வெற்றியளியாது.

நான் இங்கு பேசுகின்ற கருத்துக்கள் மத்திய அரசுக்கு நேற்றையதினம் பாராளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களுக்குப் பதிலாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

அப்போது பீற்றர் அல்போன்ஸ் குறுக்கிட்டு முதலமைச்சர் இங்கு கூறும்போது மீண்டும் மீண்டும் மத்திய அரசு கேட்டும் கடற்கரைப் பாதுகாப்புப் படை வரவில்லை என்றார்.

முதலமைச்சரைக் குறை கூறி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதால்தான் இந்திய இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திற்குப் பாதுகாப்புக்கு வர அஞ்சுகிறார்களோ என்ற ஐயம் எங்களுக்கு இருக்கிறது.

பற்றி அவர் எழுதிய கட்டுரையில் வெளியிடப்பட்டுள்ளது. ஒருவேளை முதலமைச்சர் குறைகூறிய காரணத்தால் இராணுவத்தினர் இங்கே வர மாட்டார்களா என அல்போன்ஸ் கேட்டார். காவல் துறை மானியத்தில் காவல் துறையை இவ்வளவு குறை கூறியவர்களே அதற்காகக் காவல்துறை வராமலா போய் விடும் என்றார் முதலமைச்சர்

டீ. பி. ராஜேந்திரன்,

அந்தப் புத்தகத்தில் வியட்னாமில் அமெரிக்க இராணுவத்தினர் மயிலாய் என்றகிராமத்தில் சுமார் மூவாயிரம் மக்களை குழந்தைகளுடன் ஒழித்துத்தள்ளியது. மயிலாய்என்ற தலைப்பில் வல்வெட்டித் துறையில் எழுபத்திரண்டுபேர் கொல்லப்பட்டது பற்றி அவர் எழுதியி[illegible]கிறாரே தவிர குறிப்பிட்ட குற்றச் சாட்டாக அது இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது சர்வதேச பிரச்சினை இலங்கைக்கும்இந்தியாவுக்கும் உள்ள பிரச்சினை எதிர் காலத்தில் இந்தியாவை இலங்கை அரசு குறை கூறுவதற்கு ஒரு சான்றாக முதலமைச்சர் கூறியதைச் சொன்னால் இந்தியா குற்றம் சாட்டப்படவேண்டிய நிலைக்கும் ஆளாகும்.

## முதலமைச்சர்

இது பகிரங்க அதிசயமாக இருந்தது 'இந்தியா ருடே' ஏடு அந்த முகாம்களை படங்களுடன் அப்போது வெளியிட்டது ஆனால் அதனை இரகசியம் என எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்தனர். இந்தச்செய்தி எப்படிஅவர்களுக்கு கிடைத்தது என்றால் 'றோ' அதிகாரிகளின் அலுவலகத்தின் அந்த 'மப்' பை படங்களுடன் தொங்க விட்டிருந்தனர்.

---

# நெடுங்கேணி ஆஸ்பத்திரி திருத்தி அமைக்கப்படாதா?

ஆசிரியர்,

ஈழநாதம்.

நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலை அவல நிலையில் உள்ளது. இந்நிலை தீராதா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## மக்கள் மடல்

நெடுங்கேணிப் பகுதி சுற்றாடலில் உள்ள சுமார் நாற்பது கிராம மக்கள் இவ் வைத்தியசாலையையே நம்பியுள்ளனர். இவ் வைத்தியசாலையில் பிரசவ விடுதி ஒன்றும் ஆண் நோயாளிகள் தங்கு விடுதி, பெண் நோயாளிகள் தங்கு விடுதி ஆகியனவும் உண்டு.

1987 நவம்பர் மாதம் 3 ஆம் திகதி இந்தியப் படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் தாக்குதல் நடாத்திய போது இவ் வைத்தியசாலையின் ஒரு பகுதிக் கட்டிடம் சேதமாக்கப்பட்டது.

அதனை அடுத்து 1988ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி இந்திய இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி பிரசவ விடுதி பெரும் சேதத்திற்குள்ளாகியது. தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி மீண்டும் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி பெண் நோயாளிகள் தங்கும் விடுதி முற்றாகச் சேதமாக்கப்பட்டது.

ஆண்நோயாளிகள் தங்கும் விடுதி, வைத்தியசாலை அலுவலகம் ஆகியனவும் சேதமாக்கப்பட்டது.

பின் இந்திய இராணுவத்தினரால் வைத்தியசாலையில் உள்ள சகல கதவுகளும் உடைக்கப்பட்டு, மின்சார உபகரணங்களும், குளிர்சாதனப் பெட்டி ஆகியனவும் எடுத்துச் செல்லப்பட்டன.

நெடுங்கேணி கிராமோதய சபைத் தலைவர் இவ்விடயமாக மேலதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டதனை அடுத்து - குளிர்சாதனப் பெட்டியும், மூன்று மின்விசிறிகளும் திருப்பி இந்திய இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டன.

இந்திய இராணுவத்தினர் நெடுங்கேணியை விட்டுப் போய் ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் இதுவரையிலும் இவ் வைத்தியசாலை திருத்துவதற்கான வேலைகள் நடைபெறவில்லை. மழை நேரங்களில் நோயாளிகள் மழையிலே நனைந்தபடி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் குறைந்த இப்பகுதியில் மக்கள் இவ்வைத்தியசாலையையே முழுதாக நம்பியிருக்கின்றனர்.

புனர்வாழ்வு - புனருத்தாரண வேலையில் கவனிக்கப்படவேண்டியது இவ்வைத்தியசாலை போன்றனவற்றைத் திருத்தி அமைக்கப்பட வேண்டியனவே என மக்கள் கோருகின்றன. (30)

பொன்ரகன்

நெடுங்கேணி

---

## சாணத்தில் சறுக்கி டாக்டர் காயம்

(மட்டக்களப்பு)

சாணத்தில் சறுக்கி விழுந்த டாக்டரின் கைமுறிந்து வைத்திய சிகிச்சைக்குள்ளானார்.

இச்சம்பவம் அண்மையில் மட்/ பொது வைத்தியசாலையில் நடைபெற்றது.

மேற்படி டாக்டர் மேல் வார்ட்டிலிருந்து கீழ் வார்ட்க்குள் செல்லும்போது சாணத்தில் சறுக்கி விழுந்தார் எனத் தெரிய வருகிறது. (37)

---

## ஆலயத்துக்கு மின்சாரம் போதாது

செங்கலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு மின்சாரம் குறைவாகவே வழங்கப்பட்டு வருகிறது இதனால் ஒழுங்கான மின்சார வசதி இல்லை இரவு பத்து மணிக்கு பின்பே நல்ல வெளிச்சத்துடன் மின் குமிழ்கள் எரிகின்றது.

இதே வேளை இக்கோயிலின் வருடாந்த உற்சவம் எதிர் வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதால் அதற்கு இடையில் இவற்றை சீர் செய்து தருமாறு உரிய பிரதேச சபையிடம் இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (29)

---

## விஞ்ஞான மூலவள நிலையம்

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை க.பொ.த (சாத) வகுப்பு மாணவர்களின் கல்வித்தரம் முன்னேற்றமடைய செய்வதற்காக விஞ்ஞான மூலவள நிலையம் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்தகவலை மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு கு. சோமசுந்தரம் தெரிவித்தார். (37)

---

# விவசாயிகளுக்கு தடையின்றி நீர்கிடைக்க ஏற்பாடு

முள்ளியவளை கமநல சேவைகள் நிலையத்தில் கண்டந்தரை பாவங்கை விவசாயிகளின் சிறுபோக வேளாண்மைக்கு நீர் வழங்குவது பற்றி ஆராயப்பட்டது.

1949 ஆம் ஆண்டு பத்து ஏக்கர் தரிசு நிலத்தை ஏழை விவசாயிகளுக்கு அரை ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

இந்த வெளி வயல்களுக்கு குஞ்சுக்குளம், புதறிக்குடா, ஊற்றங்கரை ஆகிய குளங்களிலிருந்து கழிவுநீரே கிடைக்கப் பெற்று வந்தது.

இதற்கு மேலே உள்ள பெருநில சொந்தக்காரர் அணை போட்டு இந் நீரைத் தடை செய்தனர்.

இந்தப்பிரச்சினை சம்பந்தமாக சகல விவசாயிகளையும் அழைத்து விசாரித்து கழிவு நீர் தடங்கல் இன்றி வழங்குவதற்கு ஒழுங்குகளை முள்ளியவளை விடுதலைப்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் பிரசாத் மேற்கொண்டார். (58)

---

# செஞ்சிலுவைச் சங்க தினத்தில் விளையாட்டுப் போட்டி முடிவு

(விஷேட நிருபர்)

சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நடாத்திய மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர் பெயர்களும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும். 52 மைல் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் 1ஆம் இடம் வை. கைலைநாதன் (சங்கானை) 2ஆம் இடம்: எஸ். சிற்பவானந்தன் (தெல்லிப்பளை) 3ஆம் இடம்: எஸ். துரைமணி (யாழ்ப்பாணம்)

12-மைல் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம்: முதலாமிடம்: செல்வி ரி. சுஜிதா (சண்டிலிப்பாய்) இரண்டாம் இடம்: செல்வி என். இராசமலர் (சாவகச்சேரி) மூன்றாமிடம்: செல்வி க. ஞானகௌரி (சாவகச்சேரி)

26 மைல் மரதன் ஓட்டப் போட்டி முடிவு 1ஆம் பரிசு கி .உதயகுமார் (கோப்பாய்) 2ஆம் பரிசு: க. சண்முகம்பிள்ளை (வேலணை) 3ஆம் பரிசு: வே. ஆன்சலம் (யாழ்ப்பாணம்)

வலு விழந்தவர்களுக்கான 1மைல் முச்சக்கர வண்டி ஓட்ட முடிவு: 1ஆம் இடம்: நா. சந்திரன் (ஈச்சமோட்டை) 2ஆம் இடம்: ஏ. குணசிங்கம் (யாழ்ப்பாணம்) 3ஆம் இடம்: ஆர். கோபால் (யாழ்ப்பாணம்)

மேற்படி போட்டிகளை முறையே மநகரசபை ஆணையாளர் வ. பொ. பாலசிங்கம் யாழ். தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன், யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் இ, தெய்வேந்திரன், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கனகலிங்கம் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் போட்டிகள் நடத்தப்பட்டது. (21)

ஈழநாதம்

# திருமலை மாவட்டத்தில் சிங்களவர் தொகை தமிழரைத் தாண்டியது !

## சிங். 35 வீதம், தமிழர் 32 வீதம், முஸ்லிம் 29 வீதம்

## பொது நிர்வாக அமைச்சின் புள்ளி விபரம்

(மட்டக்களப்பு)

1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் மக்களும் அடுத்து முஸ்லிம் மக்களும்மிகப்பெரும் பான்மைச் சமூகங்களாக வாழ்ந்த திருக்கோணமலை மாவட்டத்தில். ஐம்பதாண்டுகளில் இன்று சிங்களவர்களே பெரும் பான்மைச் சமூகமாக்கப் பட்டிருக்கின்றனர். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் இன்று திருமலை மாவட்டத்தில் சிங்களவர் பெரும் பான்மையினராக வளர்ந்திருக்கிறார்கள்,

இப்பொழுது திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்களவர் முப்பத்தைந்து தசம்ஆறு வீதமாகவும் தமிழர்கள் முப்பத்திரெண்டு தசம் ஐந்து வீதமாகவும் முஸ்லிம்கள் இருபத்தொன்பது தசம் ஒரு வீதமாகவும் உள்ளனர். இங்கு இந்தியத் தமிழர் இரண்டு வீதமுள்ளனர்.

அரச வேலை வாய்ப்புகளில் இனவிகிதாசாரம் பேணப்படல் தொடர்பாக பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் வெளியிட்டுள்ள நிர்வாக சுற்றுசுறிக்கையில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

வட-கிழக்கு மாகாண ஏனைய மாவட்ட விகிதாசாரம் வருமாறு.

யாழ்ப்பாண மாவட்டம். இல, தமிழர்-96.9 முஸ்லிம்-1.6 சிங்களம்-0.8 இந்தியதமிழர்-0.07

கிளிநொச்சி மாவட்டம் இல. தமிழர்-81 2 இந், தமிழர்-16.4 முஸ்லிம்-1.2 சிங்களவர்-1.1.

மன்னார் மாவட்டம் இல. தமிழர்-51.3 முஸ்லிம் - 26.1 இந். தமிழர்-13.0 சிங்களவர் 8.2.

வவுனியா மாவட்டம் இல, தமிழர்-56.8 இந். தமிழர்-19 6 சிங்களவர்-16.6 முஸ்லிம்-6.8

முல்லைத்தீவு மாவட்டம் இல. தமிழ்-75.4 இந். தமிழர்,14.5 சிங்களவர்-5.2 முஸ்லிம்-4.7.

மட்டக்களப்பு மாவட்டம் இல. தமிழ்-70.8 முஸ்லிம். 23.9 இந். தமிழ்-1.2 சிங்களவர்-3.4.

அம்பாறை மாவட்டம் முஸ்லிம்-41.9 சிங்களவர் - 37.8 இல. தமிழர்-20.0 இந்.தமிழர்-0.4.

மாகாண ரீதியாக விகிதாசாரம் வருமாறு.

வடக்கு இல. தமிழர்-86.3 இல, முஸ்லிம்-4.6 இந்: தமிழர்-3 7 சிங்களவர்-3.2

கிழக்கு தமிழர்-40 3 முஸ்லிம்-32.2 சிங்களவர் - 25.8 இந். தமிழர்-1.1. என அமையும்,

மாவட்ட, மாகாண அடிப்படையிலான வேலைவாய்ப்பு விகிதாசாரங்கள் மேற்படி தகவல்களாகும்.

அகில இலங்கை ரீதியிலான நியமனம் யாழ் மாவட்டம்-5.0, திருமலை-1.8 அம்பாறை-2 6, மட்டக்களப்பு-2,2, முல்லைத்தீவு-0.5 வவுனியா-0.6, மன்னார்-0.7, கிளிநொச்சி-0.6 என அமையும்,

### யாழ். நகர வீடுகளுக்கு ஒழுங்காக நீர் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட குடிநீர் வழங்கப்படும் வீடுகளுக்கு கடந்த சில நாட்களாக ஒழுங்காக நீர் கிடைப்பதில்லை. இதனை நம்பியுள்ள குடும்பங்கள் பெரிதும் அவதியுறுகின்றன.

இதேவேளை வீதிகளிலுள்ள அதிக நீர்க்குழாய்களில் நீர் வழங்கும் பகுதி (பைப்) பழுதடைந்து நீர் வீண்விரயமாகி ஒடுகிறது.

யாழ். மடத்தடியிலுள்ள தண்ணீர்த்தாங்கி அலுவலகத்திலும் திறப்பணத்திலிருந்து இருபத்திநான்கு மணிநேரமும் தண்ணீர் ஒடிக்கொண்டு இருக்கிறது.

இதுகுறித்துசம்பந்தப்பட்ட ஊழியரிடம் கேட்டபோது பல வருடமாக இப்படியே நீர் ஒடுகிறது என்றார்.

### ஐ.தே.கட்சி நிர்வாகக் குழுக் கூட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக்குழுக்கூட்டம் இன்று கட்சித்தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அரசியல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடுமுழுவதும் உள்ள ஐ. தே. க. நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் இக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா சிறப்புரை ஆற்றுவார்.

### வவுனியா நகரில் வெசாக் பெரகரா

(வவுனியா)

வெசாக் தினத்தையொட்டி நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் பெரகரா நடைபெற்றது. கண்டிவீதி: ஹொரவபொத்தானவீதி,யாழ்ப்பாண வீதி, மன்னார் வீதி ஆகிய நான்கு வீதிகள் வழியாக பெரகராக்கள் வவுனியா பௌத்த விகாரையை வந்தடைந்தது. பெரகராவின் கண்டிய நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. சகல இன மக்களும் பெரகராவில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பெரகராவில் கல்வித் திணைக்கள, அரசாங்க அதிபர் அலுவல ஊழியர்களும், மற்றும் பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

வவுனியா பௌத்த விகாரையில் சமய நிகழ்ச்சிகளுடன் போதி பூசையும் இடம்பெற்றது.

மாலையில் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### கில்மனுக்கு நினைவாஞ்சலி

(சாவகச்சேரி)

இந்திய இராணுவத்துடன் மோதி பல ஆயுதங்களையும் மீட்ட பின்னர் மிருசுவில் பகுதியில் வீரமரணமடைந்த வீரவேங்கை கப்டன் கில்மனுக்கு முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி செலுத்தி உருவப்படமும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இம்மாதம் 16 ஆம் திகதி மீசாலையில் இந்த நினைவாஞ்சலிக் கூட்டமும் உருவப் படத்திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தென்மாரட்சிப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (35)

### நகுலன் நினைவாக குழாய்கிணறு அமைப்பு

(சாவகச்சேரி)

வீரவேங்கை நகுலனின் இரண்டாவது நினைவாஞ்சலியை முன்னிட்டு, அவர் நினைவாக கல்வயலில் ஓர் குழாய்க் கிணறு அமைப்பதற்கான முயற்சியில் கல்வயல் பகுதி சிற்றூரவையினரும், பொதுமக்களும் இறங்கியுள்ளனர்,

இந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் மோதியதில் வீரமரணமடைந்த வீரவேங்கை நகுலனின் இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலி இம்மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தினத்தில் நகுலன் நினைவாக இந்த குழாய்க் கிணற்றுத் திறப்பு விழாவை நடத்துவதென திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வயல் பகுதி குடிதண்ணீர் பிரச்சினை உள்ள இடம். நகுலன் நினைவாக அமைக்கப்படும் இக் குழாய்க் கிணறு இப்பகுதி குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கும் நல்ல தீர்வைக் கொடுக்கும் என நம்பப்படுகிறது. கல்வயல் பகுதி பொதுமக்கள் இத்திட்டத்திற்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள். (35)

### தற்கொலை முயற்சி

(வவுனியா)

பெரியமடு கிராமத்தில் இளம் பெண் ஒருவர் கிருமிநாசினி அருந்தி வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிவலிங்கம் அசோகராணி (வயது25) என்பவரே கிருமிநாசினி அருந்திய பெண் ஆவார். (தி)

### பாக்கு நீரிணையில் கடத்தல் அதிகரிப்பு.

(சென்னை)

பாக்கு நீரிணையில் கடத்தல் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக இந்திய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ் நாட்டிலிருந்து வட இலங்கைப் பகுதிக்கு மட்டுமன்றி வேறு இடங்களுக்கும் கடத்தல் படகுகள் செல்கின்றன.

சுங்கப்பகுதியினரின் கடற் கப்பல்களைக் கண்டதும் கடத்தல் படகுகள் வேகமாக ஒடி இலங்கைக் கடல் எல்லைக்கு அப்பால் சென்று விடுவதால் அவர்களை கைதுசெய்யமுடியவில்லை.

### சகல பதிவு----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


ஆகியவையும் தமிழிலேயே பதியப்படுவதுடன் சகல ஏடுகளும் தமிழிலேயே பேணப்படுகின்றன என காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. சதாசிவஐயர் குறிப்பிட்டார்.

### முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயத்தை ஊக்குவிக்க ஐக்கிய நாடுகள் நிதி உதவி.

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க ஐக்கிய நாடுகள்

இதன்படி பெரியகுளம், கரிப்பட்ட முறிப்புக்குளம், ராமையன்குளம், [illegible]ாலைக் கட்டுவன்குளம், [illegible]தாஸ்தி மோட்டைக்குளம் என்பன



### பளையில் வாக்காளர் இடாப்பு தயாரிப்பு

(பச்சிலைப் பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 18 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் தற்பொழுது வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது, அதில் 18வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் எல்லோரையும் வாக்களிக்கும் உரிமை உடையவர்களாக சேர்த்துக் கொள்ள ஒவ்வொரு பகுதி கிராம சேவை அலுவலரும் வீடு வீடாக சென்று விபரங்களை

### காணாமற் போன

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டியாக வங்கிக்குத் தகவல் கொடுக்கப்பட்டதால் புனர்வாழ்வு நிவாரணம் மோசடி தடுக்கப்பட்டது.

இக் காசோலைகள் 3 தனியார் வர்த்தகர்களின்போலிக் கையொப்பமிடப்பட்டு ரொக்கமாக்கப்பட்டுள்ளது.

சுமார் 65,000 ரூபா மோசடி தனியார் வர்த்தகர்களிடம் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இக் காசோலைகள் எப்படி மர்மமாக மறைந்தது?

இம் மோசடி செயலக ஊழியர்களின் ஒத்துழைப்பு இன்றி நடைபெற்றிருக்கமாட்டாது

## கடத்தல் அதிகரிப்பு.

(சென்னை)

பாக்கு நீரிணையில் கடத்தல் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக இந்திய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.


தமிழ் நாட்டிலிருந்து வட இலங்கைப் பகுதிக்கு மட்டுமன்றி வேறு இடங்களுக்கும் கடத்தல் படகுகள் செல்கின்றன.

சுங்கப்பகுதியினரின் கடற் கப்பல்களைக் கண்டதும் கடத்தல் படகுகள் வேகமாக ஓடி இலங்கைக் கடல் எல்லைக்கு அப்பால் சென்று விடுவதால் அவர்களை கைதுசெய்யமுடியவில்லை.

ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தென்மாரட்சிப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (35)

...யுடன் மோதியதில் வீரமரணமடைந்த வீரவேங்கை நகுலனின் இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலி இம்மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தினத்தில் நகுலன்...

...ரப் பிரச்சினைக்கும் நல்ல தீர்வைக் கொடுக்கும் என நம்பப்படுகிறது. கல்வயல் பகுதி பொதுமக்கள் இத்திட்டத்திற்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள். (35)



'தமிழ்த்தாய் பதிப்பகம்' நேற்று முன்தினம் காலை மின்சார நிலைய வீதியில் விமாகிகள் கட்டிட மேல் மாடியில் திறந்து வைக்கப்பட்டது. முதுபெரும் எழுத்தாளரும் ஆனந்தா அச்சக உரிமையாளருமான திரு. தி ச. வரதர் பதிப்பகத்தை திறந்து வைக்கையில் எடுத்த படம் இது.

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# விவசாயத்தை ஊக்குவிக்க ஐக்கிய நாடுகள் நிதி உதவி.

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் நிதியுதவி அளித்துள்ளது.

இதன்படி பெரியகுளம், கரிப்பட்ட முறிப்புக்குளம், ராமையன்குளம், [illegible]ாலைக் கூட்டுவன்குளம், [illegible]தாஸ்தி மோட்டைக்குளம் என்பன திருத்தியமைக்கப்படவுள்ளன

எதிர்வரும் பெரும் போகத்திற்கு முன்னர் இந்த திருத்த வேலைகள் மூடிவடையும் என சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

## கூட்டுறவு பரிசோதகர் பதவி நிரந்தரம்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண சபையினால் நியமனம் வழங்கப்பட்ட கூட்டுறவு பரிசோதகர்கள் பதவி நீக்கம் செய்யப்படமாட்டார்கள்.

மேற்படி தகவலை மாகாண சபை கூட்டுறவுதுறை அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்:

இந்த உத்தியோகத்தர்கள் தொடர்ந்து பணியாற்றலாம் என்று மத்திய கூட்டுறவு அமைச்சு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (37)

## பாம்பு கடித்து இளைஞர்மரணம்

(வவுனியா)

படுக்கையில் நித்திரை செய்துகொண்டிருந்த சமயம் பாம்பு தீண்டி 28 வயது இளைஞர் பலியானார்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் இடம்பெற்றது.

வில்வராசா என்ற விவசாயம் செய்துவரும் இளைஞரே பலியானவராவார்.

கண்டள் கருவளை என அழைக்கப்படும் பாம்பு தீண்டியதாகக் கூறப்பட்டது.

ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போது மேற்படிஇளைஞர் வழியில் மரணமானார்.

தற்போது இவரது சடலம் அனுராதபுரம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது, (தி)

# பணிசுக்குப் பதில் வீட்டில் சமைத்த உணவு

(கொழும்பு)

நாடுபூராகவுமுள்ள அரசாங்க, தனியார் பாடசாலைகளில் கல்வி பயிலும் 40 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு மதிய உணவுக்குப் பதிலாக 3ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன. இந்த உணவு முத்திரைகளைக் கொடுத்துப் பெற்றோர் சோயா அவரை, பயறு, கடலை வகைகள், காய்கறி ஆகியவற்றைக் கூட்டுறவுக் கடைகளில் வாங்கலாம் இந்த உணவு வகைகளை ஆக்கிப் பெற்றோர் மதிய உணவாகப் பாடசாலை செல்லும் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டுமாம்.

ஹென்வெல, திவியப்பிட்டியா, ஹலவெல, கருவலகஸ்வேல ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இத் திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. இப் பரீட்சார்த்தத் திட்டம் பயன் பொருத்தமாய் அமைந்ததால் நாடு பூராகவும் அமுல் படுத்தப்படவுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட பாண், பணிஸ், பிஸ்கெற் போன்ற தின்பண்டங்களை இனிமேல் மதிய உணவாக வழங்கக் கூடாது என்று அதிபர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

பாணுக்கும், பிஸ்கெட்டுக்கும் பதிலாக வீட்டில் சமைத்த உணவுகளை மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சு பள்ளிக்கூட அதிபர்களைப் பணித்துள்ளது.

பள்ளிக்கூடங்களில் மதிய உணவுக்கென வழங்கப்பட்ட பணத்தைக் கையாடுவதாகக் கிடைத்த குற்றச் சாட்டைத் தொடர்ந்தே புதிய திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது.

### இரவு 8 மணி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுமுறை தினங்களிலும் அமுலில் இருக்கும்.

தற்போது சுண்டுக்குழி யாழ்ப்பாணம் தபால் நிலையங்களில் அடிக்கடி தொலைபேசி பழுதடைவதாகவும் ஆனால் தனியார் தொலைபேசி நிறுவனங்கள் சீராக இயங்குவதாகவும் இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்

### நிதர்சனப் பாடல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சிப் பாடல்கள் எல்லாம் உரக்கப் போடப்பட்டிருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். ரயிலிலிருந்தவர்கள் வவுனியா வந்துவிட்டதோ என விழித்தெழுந்து பார்த்த போது கல்கமுவ என பெயர்ப்பலகை காட்டியபோது அனைவரும் ஆச்சரியமடைந்ததாக அவ்வலுவலர்கள் தெரிவித்தனர். (லோ)

### மன்னார் வைத்தியசாலை

# சுவிஸ் அரசாங்க உதவியால் புனரமைப்பு பூர்த்தி

மன்னார் ஆதார வைத்தியசாலையைப் பழுது பார்த்து மருத்துவ உபகரணங்களைப் பொருத்தி, ஏனைய வசதிகளையும் செய்து சுவிற்சலாந்து அரசாங்கம் அதனை நிர்வாகிகளிடம் ஒப்படைத்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கு இரண்டு கோடியே இருபது லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. முன்னர் இயங்கிய கட்டிடத் திணைக்களத்தின் உதவியுடனும் சுவிற்சலாந்து கட்டிடக்கலைஞர் ஆர்.மைரஞ்ஜின் ஒத்துழைப்புடனும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

1988ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புனர்நிருமாண வேலைகளை சுவிற்சலாந்து தூதுக்குழு ஒன்றுநிரந்தரமாக தங்கியிருந்து மேற்பார்வை செய்தது. ஆறு புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. வைத்தியசாலைஊழியர்களின் இருப்பிடத்துக்கான அறைகளும்இதிலடங்கும். ஏற்கனவே இருந்த வார்ட்டுக்கள் புனரமைக்கப்பட்டன. சத்திர சிகிச்சை வார்ட்டுக்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக்குழுவில் தற்பொழுது பிரெஞ்சு நாட்டு வைத்தியர்கள் கடமையாற்றி வருகிறார்கள். ஆய்வுகூடத்தைத் தரமுயர்த்துவதற்காக சுவிற்சலாந்து தொழில் நுட்பவியலாளர் ஒருவர் கடமையாற்றி வருகின்றார்.

புதிய மருத்துவ உபகரணங்கள் இவ்வைத்திய சாலைக்கு வழங்கப் பட்டுள்ளன. படுக்கை வசதிகள் 120 இல்இருந்து 180 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் புனர்நிர்மாண, புனர்வாழ்வு சமூகநல அபிவிருத்திசபையின் செயலாளர் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள்.

### முதல் நிலையம்

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஆங்கில கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்யும்நோக்கத்துடன் இந்நிலையம் செயல்படும்.

மெதடிஸ்த மத்திய கல்லூரியில்அமைக்கதீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (37)

### நாவன்மை

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மூர்த்தி, தலைமைச் செயலாளர் இணக்கசபை உறுப்பினர் மணியம் உட்பட எல்லா மாவட்டப் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

### ஒப்பந்தக்காரர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்து முடிக்க கற்கள் இல்லாததாலும், கட்டிடங்களை அமைக்கமரங்களுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடிக்க முடியாதுள்ளது.

டிசம்பர் மாதம் முடிவடைவதற்குள் ஒதுக்கப்பட்ட நிதிக்குரிய வேலைகள் செய்து முடிக்கப் படாவிட்டால் கிடைத்த நிதி திரும்பிச் சென்றுவிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (49)

...ஆவார். (தி)

## பளையில் வாக்காளர் இடாப்பு தயாரிப்பு

(பச்சிலைப் பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 18 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் தற்பொழுது வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது, அதில் 18வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் எல்லோரையும் வாக்களிக்கும் உரிமை உடையவர்களாக சேர்த்துக் கொள்ள ஒவ்வொரு பகுதி கிராம சேவை அலுவலரும் வீடு வீடாக சென்று விபரங்களை கேட்டு படிவம் நிரப்புகின்றார் (63)

...பதுவதுடன் சகல ஏடுகளும் தமிழிலேயே பேணப்படுகின்றன என காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. சதாசிவஐயர் குறிப்பிட்டார்.

### காணாமற் போன

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டியாக வங்கிக்குத் தகவல் கொடுக்கப்பட்டதால் புனர்வாழ்வு நிவாரணம் மோசடி தடுக்கப்பட்டது.

இக் காசோலைகள் 3 தனியார் வர்த்தகர்களின்போலிக் கையொப்பமிடப்பட்டு ரொக்கமாக்கப்பட்டுள்ளது.

சுமார் 65,000 ரூபா மோசடி தனியார் வர்த்தகர்களிடம் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் இக் காசோலைகள் எப்படி மர்மமாக மறைந்தது?

இம் மோசடி செயலக ஊழியர்களின் ஒத்துழைப்பு இன்றி நடைபெற்றிருக்கமாட்டாது எனக் கருதப்படுகின்றது. (37)

## 5ஆம் ஆண்டு வீரஅஞ்சலி



### லெப். இளங்கோ
### இத்தூஸ்பிள்ளை மேரிதாசன்
(திருக்கோணமலை)

தாயகத்தில்:
26-06-1955

தியாகத்தில்:
12-05-1985

இதயத்தில் முதல் இடம்
இலட்சியத்துக்கே என்றீர் - நல்
உதயத்தைக் காண உங்கள்
உதிரத்தை ஈந்து நின்றீர்.
எதனையும் இழந்து நாங்கள்
எங்களின் மண்ணை மீட்போம்-ஆண்டு
சதமது சென்றாலும் நீர்
சாகவே மாட்டீர் என்போம்

–நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.